பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

A/L 90
Weekend Class
BOTANY
திரு. குகாதரன்
அலகு — 2
ஆரம்பம்:
24-7-88 Sun
9-30 — 10-30
NEW MASTER
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

89 A/L
Weekend Classes
BOTANY
திரு. குகாதரன்
அலகு 5+10
தாவர இராட்சியப் பிரிவுகளும் இனப்பெருக்கமும்
(F. W. C. Unit-7)
ஆரம்பம்: 24-7-88 Sun
12-30 — 1-30 p. m.
NEW MASTER
INSTITUTE
241, Navalar Rd, JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 05 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 05 ( 20 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 136

# தமிழ்நாடு முழுவதும் 29 ஆம் திகதி பேரணி

## போர் நிறுத்தம் செய்யாததை ஆட்சேபித்து தி.மு.க. நடத்தும்

— சென்னையிலிருந்து தி. மேனகன் —

சென்னை, ஜூலை 20

**ஈழத் தமிழ்ப் பிரதேசங்களில் போர் நிறுத்தம் செய்யாததை ஆட்சேபித்து-**

**இம்மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, தமிழ்நாடு முழுவதிலும் மாவட்ட ரீதியாகப் பேரணிகளையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தப்போவதாக-**

**திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.**

இது சம்பந்தமாக தி. மு. க மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானத்தின் விவரம் வருமாறு;-

கடந்த ஆண்டு ஜூலை 29 இல் சிங்கள அரசுடன் இந்திய அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உண்டு.

எனினும் அந்த ஒப்பந்த ஷரத்துக்களைக் கூட நடைமுறைப்படுத்தாமல் தமிழ் ஈழ மக்களுக்குத் தொடர்ந்து இன்னல்களை விளைவித்தும்-

விடுதலைப் புலி இயக்கத்தினர் அந்த ஒப்பந்தத்தை முழுமையாக ஏற்காவிட்டாலும் ஒப்பந்தம் நிறைவேற ஒத்துழைப்புத் தருவதாக அறிவித்தும் கூட அவர்களையும் தேடி அழிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவதையும்—

ஆயுதங்களை ஒப்படைக்கத் தயார் என்று விடுதலைப் புலிகள் கூறியபிறகும் கூட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போர் நிறுத்தம் செய்ய முன்வராமல் பிரச்சினையைத் திசை திருப்புகிற முறையில் நடந்து கொள்கிற மத்திய அரசைக் கண்டித்தும்—

இம்மாதம் (ஜூலை) 29 ஆம் திகதி தமிழ்நாடு முழுவதும் தி. மு. க. கண்டன ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்களை நடத்துவது என்று தீர்

(8- ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம

20 - 7 - 1988
ஆடி - 05
புதன்கிழமை
சுபநேரம்:
04-31 முதல் 06-01 வரை
ராகுகாலம்:
12-01 முதல் 01 31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## 3 நாட்களுக்கு போக்குவரத்துத் தடை

### மாங்குளம்- முல்லைத்திவு வீதியில்

மாங்குளம் ஊடாக முல்லைத்தீவுக்குச் செல்லும் பாதையால் 3 நாட்களுக்குப் போக்குவரத்து செய்ய வேண்டாம் என அமைதிப்படையினர் கேட்டுள்ளனர்.

இதன் காரணமாக நேற்று யாழ்நகரில் இருந்து மாங்குளம் ஊடாக 85ஆம் இலக்க பாதையில் சென்ற பஸ்கள் அனைத்தும் பயணத்தைத் தொடர முடியாமல் யாழ்ப்பாணத்திற்கும், வவுனியாவிற்கும் திரும்பின.

இதன் காரணமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையும் இந்த வழியூடாகச்செல்லும் பஸ்களின் சேவையைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

இதே வேளை பரந்தன் ஊடாக முல்லைத்தீவுக்குச் செல்லும் பாதையில் போக்குவரத்து வழமைபோல நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

வளைகுடா நிலைமை:

## நேற்றும் சண்டை நடந்ததாகத் தகவல்

தெஹ்ரான், ஜூலை 19

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை ஏற்பதாக ஈரான் அறிவித்த பின்னரும் வளைகுடாவில் இன்று (செவ்வாய்) இரண்டு நாடுகளின் படைகளும் சண்டையில் ஈடுபட்டன என்று அறிவிக்கப்படுகின்றது.

ஈராக் விமானப்படை ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள கைத்தொழில் பகுதியில் குண்டு வீச்சு நடத்தியது என்றும்—

ஈரானின் விமானப் படையும் ஈராக் மீது தாக்குதல் நடத்தியது என்றும் அறிவிக்கப்பட்டது.

ஈராக்கில் இரண்டு சண்டை விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக ஈரானும்,

ஈரானின் சண்டை விமானம் ஒன்றைச்சுட்டு வீழ்த்தியதாக ஈராக்கும் அறிவித்தன. (உ-எ)

அன்னையர் முன்னணியினர்

# திருமலையில் தடைகளிடையே சுவரொட்டிப் போராட்டம்!

## இவர்கள் ஒட்ட அவர்கள் கிழித்தனர்!!

— உதயன் திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, ஜூலை20

திருகோணமலை அன்னையர் முன்னணியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பல தடைகளின் மத்தியிலும் தமது சுவரொட்டிப் போராட்டத்தை வெற்றி கரமாக நடத்தி முடித்தனர்.

யுத்த நிறுத்தத்தை உடனே கொண்டு வர வேண்டும்; சமாதானத் தீர்வு காணப்படாமல் தேர்தல்கள் நடத்த வேண்டாம், சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து; பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்க.

மேற்கண்ட நான்கு கோரிக்கைகளை முன் வைத்தே திருகோணமலை அன்னையர் சுவரொட்டிப் போராட்டத்தை நடத்தினர்.

அன்னையர் முன்னணி உறுப்பினர்கள் திருமலை பிரதான வீதிச் சந்தியில் கூடி அங்கிருந்து மின்சார நிலைய வீதியால் சுவரொட்டிகளை ஒட்டியும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் சென்றனர்.

மின்சாரநிலையத்திற்கு முன்பாக கூட்டத்தினர் வந்தபோது அதற்கு அப்பால் செல்ல விடாது இந்திய அமைதிப்படையினர் தடுத்தனர். உடனே கூட்டத்தினர் பாதையின் குறுக்கே அமர்ந்து இருந்தனர்.

இதனை அடுத்து அன்னையர் முன்னணியின் செயலாளர்களான திருமதி. திலகவதி ரெங்க

(8-ஆம் பக்கம் பார்க்க)

## ஈரப்பெரியகுளத்தில் ஆயுதக் கோஷ்டியின் 'தர்பார்' தொடர்கிறது

வவுனியா- கொழும்பு வீதியில் ஆயுதக்கோஷ்டியின் கொள்ளைத் "தர்பார்" அதிகரித்து வருகிறது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று ஈரப்பெரிய குளத்துக்கு அண்மையில் வைத்து ஆயுதம்தாங்கிய கோஷ்டியினரால் வழிமறிக்கப்பட்டது.

வழிமறிக்கப்பட்ட பஸ் காட்டுப்பாதையூடாக சிறிது தூரம் கொண்டு செல்லப்பட்டு பயணிகளின் நகைகள் மற்றும் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்று அறியவந்தது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான பஸ்ஸே இவ்வாறு கொள்ளைச் சம்பவத்துக்கு இலக்கானது.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து வந்த மூன்று பஸ்கள் இதே பகுதியில் வைத்து கொள்ளையிடப்பட்டன என்பது தெரிந்ததே. (ஒ-10)

### முச்சந்தி முரளி



வெப்பத்துக்கும் அந்தளவு கோபம் வந்துவிட்டுது போல...

## யாழ். பல்கலைக் கழகத்தில் விரிவுரைகள் நடைபெறவில்லை

### உத்தியோகத்தர்களின் பகிஷ்கரிப்பால்

யாழ்ப்பாணம், ஜூலை20

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று விரிவுரைகள் எதுவும் நடைபெறவில்லை. பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் தமது கடமைகளைப் பகிஷ்கரித்தமையே விரிவுரைகள் நடைபெறாமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கலைப்பீட மாணவர்கள் தற்பொழுது விடுமுறையில் உள்ளனர்.

மருத்துவ பீட மாணவர்களுக்கு விரிவுரைகள் காலவரையறை இன்றி பின்போடப்பட்டுள்ளன. விஞ்ஞான பீடமாணவர்களுக்கே தற்பொழுது விரிவுரைகள் நடைபெற்று வந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

அதிகரித்த மின்கட்டணம்;

## ஒத்திவைக்குமாறு விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை20

கடந்த ஜனவரி முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட மின்கட்டண அதிகரிப்பை ஒத்திவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு விட்டது.

"தற்போதைய வட பகுதியின் நிலைமை காரணமாக மின்பாவனையாளர்கள் இந்த அதிகரித்த மின் கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலை உள்ளது.

எனவே இந்தக் கட்டண அதிகரிப்பை சிலகாலத்துக்கு ஒத்திவைக்கவும்-

இவ்வாறு யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் உள்ளூராட்சி ஆணையா

(8-ஆம் பக்கம் பார்க்க)

குச்சவெளிப் பகுதியில்

## படையினரைக் கண்டு ஓடியவர்கள் மீது சூடு

### சிங்களவர் இருவர் பலி!!

திருகோணமலை

ஜூலை 20

இந்திய அமைதிப் படையினரைக் கண்டு ஓடிய கூட்டத்தினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் இரு சிங்களவர்கள் கொலையுண்டனர். மற்றும் ஒருவர் காயமடைந்து அனுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் குச்சவெளி பொலீஸ் பகுதியிலுள்ள நீலப் பணிக்கன் குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ரோந்து சென்ற அமைதிப் படையினரைக் கண்டு கூடி நின்றவர்கள் ஓடினராம். அவ்வேளை போராளிகள் ஓடுகிறார்கள் என நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

பி. எச். சுமணதிலக (18), எம். எச். ஒஸ்டின் பெர்னாந்து (25) ஆகிய இருவருமே கொலையுண்டவர்களாவர்.

சுனில் பெரேரா என்பவர் காயமடைந்து பின்னர் அனுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (ஒ-150)

## வெப்பம் தாங்காது சீனாவில் 450 பேர் மரணம்!

பீகிங், ஜூலை 20

வெப்பம் காரணமாக சீனாவின் வடமேற்கு மாகாணத்தில் இதுவரை சுமார் 450 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் 290 பேர் வயோதிபர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

வெப்பம் அதிகரித்திருப்பதன் காரணமாக பீகிங்கில் மக்கள் குளிர்சாதன வசதிகள் பொருத்தப்பட்ட தியேட்டர்கள், வர்த்தக நிலையங்களை நாடி ஓடுகின்றார்கள் என்று செய்தி வந்துள்ளது. (ஒ-எ)

## பேசாலையில் நிலக்கண்ணி 5 ஜவான்கள் மரணம்

கொழும்பு, ஜூலை 20

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பேசாலையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஐந்து ஜவான்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

தலைமன்னாரிலிருந்து மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே அமைதிப்படை வாகனம் நிலக்கண்ணியில் சிக்கியதாகச் சொல்லப்படுகிறது.

ரயில் பாதை செப்பனிடும் பணியில் ஈடுபட்டு வந்த அமைதிப் படையினரே உயிரிழந்தனர் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்தது.

இச்சம்பவத்தின் போது இந்திய ஜவான்கள் இரண்டு பேரும் வேறு ஐவரும் காணமற் போனார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பில் இந்திய படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் இடையே நடந்த மோதலில் இரண்டு ஜவான்கள் உயிரிழந்தனர். (ஒ - எ)

## மருந்து வரவில்லை

ஜூலை ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களுக்கான மருந்து வகைகள் இன்னும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை

இந்த மருந்து வகைகளை இயன்றவரை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

பொதுச் செயலாளர் பதவி பறிபோகும்:

# தனியே பிரிந்து புதுக்கட்சி ஆரம்பிப்பார் ஜெயலலிதா!

## தமிழக அரசியலில் திடீர் திருப்பம்!!

சென்னை ஜூலை 19

★ அ.தி.மு.க பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ஜெயலலிதா நீக்கப்படவிருக்கின்றார்.

★ சமரசம் பேசிய முன்னாள் அமைச்சர்கள் அரங்கநாயகம், கே.கே. எஸ் எஸ். இராமச்சந்திரன் மற்றும் கோவைத் தம்பி ஆகியோர் நாவலர் குழுவுடன் இணைந்துவிட்டனர்.

★ ஜெயலலிதா தனிக் கட்சி ஆரம்பிக்க இருக்கின்றார்.

மேற்கண்ட புதிய திருப்பங்கள் தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

அ.தி.மு.க 'ஜெ' அணியில் ஏற்பட்ட மோதல் தீவிரமடைந்துள்ளது.

சென்ற வாரம் ஜெயலலிதா அணியில் சமரசத்தை ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்து விட்டன என்று அறிவிக்கப்படுகின்றது.

சமரச முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் ஜெயலலிதா.

"என்னால் எல்லாம் முடியும்! எல்லாரும் வெளியே போகட்டும் எம். ஜி. ஆரைப் பாலநானும் தனிக்கட்சி ஆர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரம் ஆலய வருடாந்த உற்சவம்

### பக்திபூர்வமாக ஆரம்பம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய கொடியேற்ற விழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்தி பூர்வமாகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

பக்தர்களின் 'அரோகரா' கோஷத்துடன் பூமாரி பொழிய அந்தணர்கள் வேத மோத பிரம்மஸ்ரீ ஷ. இரத்தின சபாபதிக் குருக்கள் கொடியேற்றி வைத்தார்.

அமைதிப்படையின் உயர் அதிகாரிகள் கொடியேற்று வைபவத்தில் கலந்து கொண்டு அர்ச்சனை செய்வித்தனர். ஆலயத்தின் உள்ளேயும் வெளியேயும் அமைதிப் படையினர் காணப்பட்டனர்.

தெல்லிப்பளை பாதுகாப்புச் சேவையினரின் ஆண் பெண் தொண்டர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத்தளபாடங்கள், Box Spring கட்டில், கட்டில் மெத்தைகள், Show Case அலுமாரி, மேசைகள் சிறிய பெரிய கபேட், கண்ணாடி மேசை, மகாராஜா ஹோல் செற், செற்றிகள் மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக் சந்தியருகில்.) (5093)

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

புதிய Reconditioned Honda C 70, C 50, CD 50 Chaly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. No 16 கண்டிரோட், யாழ்ப்பாணம். (உதவி அரசாங்க அதிபர் பனிமனை முன்பாக) (5092)

றிகொண்டிசன் ஹொண்டா C50, C70. C90 MD70 R.coo: GS 125 எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ஸ்தூபி பெரிய மணி, குத்து விளக்கு மற்றும் கோவில் பொருட்களும் விற்பனைக்கு உண்டு. ஸம்ஸ், 26/3 மானிப்பாய் வீதி, கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4946)

Honda C-50 Deluxe சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டது. 166 கோவில் வீதி, நல்லூர் (கந்தன் கருணைக்கு முன்பாக) (5094)

### வளவுக்காணி விற்பனை

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்தின் அருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய 5 பரப்பு வளவுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு V நல்லையா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (*360)

## கோழிக்குஞ்சு

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். மயூரா பாம் விற்பனை நிலையம் முன்பாக சாவகச்சேரி, மகேஸ்வரி ஹோட்டல் முன்பாக கரடிப்போக்கு பாலத்தடி, கிளிநொசசி. (4885)

### ஒரு நாள் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் (SHETNA B-380) பேட்டுக் குஞ்சு, குறுகிய காலத்தில் கூடிய நிறை தரக் கூடிய சேவல் குஞ்சுகள், புறோயலர் குஞ்சுகள் 22-7-88 இல் விநியோகிக்கப்படும். —R. S. K Farm: முருகபதி, உடுவில், குபேரன்ஸ்ரோர்ஸ் கொக்குவில்சந்தி, கொக்குவில். (4928)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Upland Farm கூடிய விரைவில் அதிக நிறையாக வளர்ச்சி அடையக்கூடிய 'லோமான் (Lohmann)' பிறவுண் சேவல் 20 ஆம் திகதி புதன்கிழமையும், 23ஆம் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: 9, கந்தையா லேன், (சூராவத்தை றோட்) சுன்னாகம், புகையிரத நிலையத்திற்கு அண்மையில். (5359)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (5068)

## கல்வி

Air Conditioning Refrigeration Radio - TV வயறிங் வெல்டிங் மோட்டமெக்கானிசம் வைன்டிங் தட்டெழுத்து சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் சிறந்த செய்முறை அறிமுறை பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Viapa Engineering Aid Hall 328 நாவலர்றோட் ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம். (5103)

### A/L 90 இரசாயனம்

A/L 90, இரசாயனம் 108 பிறவுண் றோட் (Brown Road) ஆசிரியர் சத்தீஸ் பிரிவுII ஆரம்பம் 20-7-88 புதன்5pm (பிரிவு I காலை வகுப்பு இடம் இல்லை.) [5364]

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar by S. B. Iyar புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக ஆரம்பம் 21-07-88 நேரம் பகல் 10 மணி – 12 மணி வரை 12, வைமன்வீதி நல்லூர். (5050)

### போட்டிப் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை 01-08-1988 காலை9-00மணிக்குநடைபெறும். விண்ணப்ப முடிவுத் திகதி 25-07-1988 Modern Education Centre, Karaveddy. (4950)

## தேவை

வீடியோ கமராமூலம் படம் எடுப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும். விக்ரர் அன்சன்ஸ் இல: 100, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் அல்லது விக்ரேஸ் மியூசிக் சென்ரர் இல: 887 ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (5109)

### ஆசிரியர் தேவை

ஆங்கிலதட்டெழுத்து, சுருக்கெழுத்து பழக்கக் கூடிய பெண் ஆசிரியர் தேவை. தொடர்பு:- 'JSB, Science Academy' கூளாவடி, ஆனைக்கோட்டை (காலை 8-30 முதல் 10-30, வரை கிழமை நாட்களில் மட்டும் நேரில் வரவும். (5358)

### தனி அறை தேவை

யாழ்/நகர எல்லைக்குள் குடியிருப்புக்கு சகல வசதியும் கொண்ட தனிஅறை தேவை. Separate Entrance விரும்பத்தக்கது. தொடர்பு: 283, C/o உதயன். யாழ்ப்பாணம். (5356)

### வெல்டர் தேவை

கேற் (Gate) கிறில் வேலை செய்யக்கூடிய நன்கு அனுபவம் உள்ள வெல்டர் தேவை. நன்கு அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் நேரில் கதைத்து தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு K. றூபலிங்சம் அத்தியடி புதுவீதி அத்தியடி, யாழ்ப்பாணம். (C5811)

## மணப்பந்தல்

கனடாவில் நிரந்தர தொழில் புரியும் 31வயது நிரம்பிய ரோமன் கத்தோலிக்க வேளாள இனத்தைச் சேர்ந்த மணமகனுக்கு நன்கு படித்த பெண்ணும், அவரின் சகோதரியான 30 வயது நிரம்பிய ஆயுர்வேத டாக்டருக்கு கல்வித்தகைமையுடைய பட்டதாரி, கணக்காளர்' பொறியியலாளர் எதிர்பார்க்கப் படுகிறது. தொடர்பு, 282, C/o, உதயன், யாழ்ப்பாணம். (5351)

## மணமகன் தேவை

யாழ். இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 38 வயது நிரம்பிய பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. நட்சத்திரம் உத்தரட்டாதி. சீதனம் வழங்கப்படும். முதல் கடிதத்திலேயே ஜாதகம், மற்றும் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு 285 C/o உதயன் யாழ்ப்பாணம். (5361)

## புத்தகங்கள்

### இலங்கைப் புவியியல்

A/L வகுப்புக்குரிய இலங்கைப் புவியியல் வெளிவந்துவிட்டது. அபிவிருத்திப் புவியியல், எறியங்கள் என்பனவற்றின் புதிய பதிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கியோன்: க. குணராசா M. A. பிரபல புத்தகசாலைகளில்கிடைக்கும். (5104)

### செங்கை ஆழியான் நாவல்கள்

மழைக்காலம், தீம் தரிகிடதித்தோம், கடல் கோட்டை, அக்கினிக் குஞ்சு, ஓ, அந்த அழகிய பழைய உலகம், கிடுகுவேலி, நடந்தாய் வாழி வழுக்கியாறு விற்பனையாகின்றன. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கிளிநொச்சியில் பிக்பென் / லங்கா புத்தகசாலைகள், (5105)

### மிடில்பேர்க்

புத்தகங்கள் சஞ்சிகைகள், கொப்பிகள், கடதாசிகள், ஒப்படைத் தேவைகள், ஸ்ரிக்கர்கள் தொகைக்கும் சில்லறைக்கும் மலிவு விலையில் கிடைக்கும் மிடில்பேர்க் கல்வியங்காடு, சந்தையடி லேன், பருத்தித்துறை வீதி. (5108)

### வெளிவந்து விட்டது

புதிய பாடல்கள் வெளிவந்துள்ளன. தொடர்பு கொள்ளுங்கள் விக்ரர் அன்சன்ஸ் யாழ்ப்பாணம். விக்ரேஸ் மியூசிக் சென்ரர் சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (5110)

## TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### அடையாள அட்டை தவறிவிட்டது

மகேஸ்வரன், நவீன சந்தை, வித்தியா பிடவைக் கடை, சாவகச்சேரி ஆகிய எனது அடையாள அட்டை இல 461132502V சாவகச்சேரி சந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேல் சொல்லப்பட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். நன்றி (C/5803)

### முதலிடம்

ரூபவாஹினி தொலைக்காட்சி தமிழ் நிகழ்ச்சிப் போட்டியில் உதய கீத நிகழ்ச்சியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவன் ஒருவர் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

செல்வன் விபுதராசா சுரேஸ் (வயது 18) என்பவரே இந்த மாணவர் ஆவார். (இ-75)

# CEYGMA PUMPS சிக்மா பம்ப்ஸ்

எமது தொழிற்சாலை மீண்டும் நாவற்குழியில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளருக்கும், விற்பனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

உங்கள் தேவைகளுக்கேற்ற

* மின்மோட்டார்கள் (Electric Motor Pumps)
* நீர் இறைக்கும் இயந்திரங்கள் (Engine Pumps)

இப்பொழுது தாராளமாக கையிருப்பில் உள்ளன.
பழுதடைந்த பம்ப்கள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்
**யுனைட்டெட் அக்ரோ என்ஜினியரிங்**
**United Agro Engineering**
274/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி. (C5812)

# SCIENCE CENTRE
KARAVEDDY

## A/L 90
## O/L 88

(JULY பரீட்சை எடுத்த மாணவர்களுக்காக)
ஆரம்பம்: 23-07-1938 பி. ப. 3மணி (5326)

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ - து)

## முக்கிய அறிவித்தல்
### அங்கத்தவர் இடாப்பு மூடுதல்

கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் இடாப்பு 30-09-88 உடன் மூடப்படவுள்ளது. ஒரு பங்கின் பெறுமதி ரூபா 10/- ஆகும். ரூபா 10/-க்குக் குறைவாக பங்குப் பணம் செலுத்தியுள்ளவர்கள் மீதித் தொகையை 30-09-88 க்கு முன்பு தத்தமது கிளைகளில் செலுத்தி அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ளவும்.

புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் தங்களுக்கு அண்மையில் உள்ள கிளைகளில் உரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுப்பூர்த்திசெய்து மேற்குறித்த திகதிக்கு முன் அங்கத்துவப் பணமாக ரூபா 10/- ஐ கிளை முகாமையாளரிடம் செலுத்தி அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ளவும்.

மு. சச்சிதானந்தன்-
13-07-88 செயலாளர்.
(C 5807)

## அறிவித்தல்

மலேசியாவில் வசிக்கும் திருமதி சவுந்தரம் கதிரவேலுவின் அற்றோணித் தத்துவகாரரான காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த சிவபாதம் மகன் பரமசிவமாவார்.

குறித்த திருமதி சவுந்தரம் கதிரவேலுவின் காலஞ்சென்ற கணவர் கந்தையா கதிரவேலுவின் மரணச் சொத்து சம்பந்தமான தத்துவ வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முடிவுறு நிலையிலுள்ளது,

அதன் இலக்கம் T / 3379 / 08.

இத்தத்துவ வழக்கில் சம்பந்தப்பட்ட ஆதனங்கள் வருமாறு:-

(1) உக்கிய புலமும் உக்கிய காடும்
(2) ஆலம்பத்தியன் கலட்டி
(3) உக்கிய புலமும் புலிவிளுந்தானும்
(4) குறிஞ்சித்தாழ்வு
(5) நம்பாவளையும் பேரான் பிட்டியும்
(6) சொக்கட்டான் பிட்டி அல்லது சொக்கத்தான் செம்பாடு
(7) வியாவில்
(8) ஆவனந்தா கலட்டி
(9) வெளவால் புளியடியும் மாவடைப்பும்

வ. மயில்வாகனம்
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
(ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற வழ, இல. T 3379 / 08ல்
1-ம் எதிர்மனுதாராகிய
கந்தையா கதிரவேலு சைம்பெண்
சவுந்தரம் கதிரவேலுவின் சட்டத்தணி)
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை
(C 5810)

# NEW Master INSTITUTE

B. M. C. Lane, JAFFNA. 241, Navalar Road, JAFFNA.

## A/L 90
பிரிவு:- II

ஆரம்பம்: 24-07-88 9. 30 மணி

| | |
|---|---|
| Zoology | 9-30 - 10-30 |
| Botany | 10-30 - 11-30 |
| Chemistry | 11-30 - 12-30 |
| Physics | 12-30 - 1-30 |
| Pure / Applied Maths | 9-30 - 11-30 |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
★ பிரிவு 1க்குரிய அனுமதிகள் கண்டிப்பாக நிறுத்தப்பட்டுள்ளன.
★ ஒவ்வொரு பிரிவுக்கும் 300 மாணவர்களுக்குமட்டுமே அனுமதி வழங்கப்படும்.
(C-5875)

## வரணி முதலிடம்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

போட்டிகளில் வரணி விளையாட்டுக் கழகம் முதல் இடத்தையும் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் மட்டுவில் விளையாட்டுக் கழகம் மூன்றும் இடத்தையும் பெற்றன. (இ-31)

## VACANCIES

Applications are called for the following posts from those who have previous working experience in educational institutions.

1. CLERKS (Female)
2. SUPERVISORS (Male)

Knowledge of English and Typewriting (Tamil) are added qualifications.

Please call personally at 3.00 p.m. on 22. 07. 1988 with all certificates and documents.

**DIRECTOR.**

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, Jaffna.
(C. 5813)

# புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

## A/L 89
கணக்கியல்: [1வருட வகுப்பு]

திரு. ஸ்ரீ
சனி, ஞாயிறு 7.30 - 9.30
(2 மணித்தியாலங்கள்)
[அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன]

## A/L 90
கணக்கியல் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
விண்ணப்பங்களை பதிவு செய்யவும்
(C/5814)

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 5619 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 5/-உம் வைப்புப் பணமாக ரூபா 250/- உம் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப்பெற்று30-07-88ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம்

பொது முகாமையாளர்,
புங்குடுதீவு-நயினாதீவு
பல நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.

என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் ''கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.

சாக்கு விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 67 கிலோ மாவு | 445 |
| 55 ,, ,, | 160 |
| 100 கிலோ அரிசி | 992 |
| 67 ,, , நம். 1 | 855 |
| 67 ,, ,, நம். 2 | 51 |
| 50 ,, ,, | 84 |
| 55 ,, ,, | 1922 |
| சீனிச் சாக்கு | 570 |
| சீனி பாய்க் | 320 |
| நவதானியம் | 61 |
| பருப்பு | 15 |
| கழிவு | 134 |
| துண்டு | 10 |
| மொத்தம் ... | 5619 |

பொது முகாமையாளர்
புங்குடுதீவு – நயினா
பல நோ. கூ. சங்கம்.
( C 5808)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. P. அன்ரன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

வெளிநாட்டுப்

பயண ஒழுங்குகள்

கனடா, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், அமெரிக்கா

இறைவன் அருளைத் துணையாகக்கொண்டு எமது அடுத்த சிறு குழுக்கள் இரண்டு கடந்த வாரம் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும் பிரதி வாரமும் எமது சிறு குழுக்கள் ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளுக்கு எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம். எனவே விவரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

எமது புதிய சேவைகளாக அமெரிக்காவுக்கு விசா எடுத்து நிச்சயமான பயண ஒழுங்குகளைச் செய்து தருகின்றோம்.

சிங்கப்பூர் கப்பல் வேலைவாய்ப்புகள்:

சிங்கப்பூர், மலேசியா, பர்மா, ஜப்பான் முதலிய கிழக்காசியப் பிராந்தியத்தில் சரக்குக் கப்பல்களில் பணிபுரிய கப்பல் பணியாட்கள் உடனடியாகத் தேவை.

கடல் அனுபவம் உடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

கனடா:

கனடாவில் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு.

சவூதி அரேபியா:

சவூதி அரேபியா தலைநகரில் பிரசித்தி பெற்ற ஒரு உணவுத் தொழிலகத்தில் (CATERING COMPANY) பணிபுரிய தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் முதலியோர் தேவை.

அடிப்படைச் சம்பளம்: 450 சவூதி றியால்

ஓவர்டைம் உத்தரவாதம்.
உணவு இருப்பிடம் இலவசம்.

மாலைதீவு:

மாலைதீவுத் துறைமுகத்தில் பணிபுரியத் தொழிலாளர்கள் தேவை.

மாலைதீவு அரசாங்கத்தின் தொழில் அனுமதிப் பத்திரத்துடன் பயணம் செய்ய உத்தரவாதம்

அடிப்படைச் சம்பளம்:
75 அமெரிக்க டொலர்கள்

ஓவர்டைம் உண்டு. உணவு, இருப்பிடம் இலவசம். இரண்டு வாரங்களுக்குள் பயணம் நிச்சயம். நியாயமான குறைந்த கட்டுப் பணம். விரும்புவோர் உடனே தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூர், கனடா, கிறீஸ்:
வீட்டு வேலைப் பணிப்பெண்கள்

ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு மேற்படி மூன்று நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு

விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும் சகல விவரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பயண அமைப்பாளர்

S. P. அன்ரன்
வேல் றேட் சென்ரர்
(மக்கள் வங்கி முன்பாக)
இல. 114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Branch (கிளை)
S. RATNARAJAH,
RAJA STORES
Araly - North.
VADDUKODDAI.

(C 5806)


# பூஸாவிலுள்ள வடபகுதி இளைஞர்களைப் பார்வையிட பெற்றோருக்கு வாய்ப்பு

## யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை

காங்கேசன்துறை, ஜூலை 20

காலி பூசா முகாமில் உள்ள வடபகுதி இளைஞர்களைப் பார்வையிட அவர்களின் பெற்றோரை அழைத்துச் செல்லவும் அவர்கள் நிவாரணம் பெறவும் ஏற்பாடுகளை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ளவிருக்கிறது.

மேற்படி சங்கக் கூட்டம் நடைபெற்ற சமயம், பூஸாவில் இருந்து சங்கத் தலைவருக்கு அளவெட்டியை சேர்ந்த பாலகுமார் பாலரஞ்சன் எழுதிய கடிதமும், உதயன் பத்திரிகையில் வெளியான ஞானப்பிரகாசத்தின் கடிதமும் ஆராயப்பட்டன.

பூசாவிலுள்ள வடபகுதி இளைஞர்களின் கஷ்ட நிலையை நேரில் பார்வையிட அவர்களின் குடும்பத்திலிருந்து ஒவ்வொருவரை அழைத்துச் செல்வதென முடிவாகியது.

இவ்வாறு செல்லவிரும்புகிறவர்கள் இம் மாதம் 25 ஆம் திகதி யாழ். செஞ்சிலுவைச் சங்கக் காரியாலயத்துக்கு வந்து பதிவு செய்யும்படி கோரப்பட்டுள்ளது.

அத்துடன் வடபகுதியில் உள்ள கைதிகளின் பெற்றோர், பாதுகாவலர் ஆகியோருக்கு நிவாரணம் வழங்கவும் செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

(இ—68)

## புலமைப்பரிசில் பரீட்சை

வடமராட்சி ஜூலை 20

இவ் வருடத்திற்கான புலமைப் பரிசில் பரீட்சைகள் இம் மாதமும் அடுத்த மாதமும் நடைபெறவுள்ளன.

6 ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரீட்சை இம்மாதம் 24 திகதி ஞாயிற்றுக்கிழமையும் 5 ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரீட்சை அடுத்த மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளதாக கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (60)

# தமிழர்தேசியதினத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்

## பிரெஞ்சு டாக்டர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 20

எங்களுடைய தேசிய தினத்தை நீங்கள் கொண்டாடுவதுபோல் உங்களுடைய தேசிய தினத்தை நாங்கள் கொண்டாடும் நாளை எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் கூடியிருந்த தமிழ் மக்களைப் பார்த்து பிரெஞ்சு டாக்டர் சுவோடின்ஹெலன் கூறினார்.

யாழ் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள பிரெஞ்சு நட்புறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரான்ஸ் நாட்டின் தேசிய நிகழ்ச்சி கடந்த 14ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு மந்திகை ஆதார வைத்திய சாலையில் பணிபுரியும் பிரெஞ்சு வைத்தியர்கள் வருகை தந்திருந்தனர்.

இவர்களில் ஒருவரான அவோடின் ஹெலன் விழாவில் உரைநிகழ்த்தினார்.

சங்கத் தலைவர் டாக்டர் சேவியர் நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்தார்.

இவ்விழாவில் பேராசிரியர் எஸ். சண்முகதாஸ் உரைநிகழ்த்துகையில்—

பிரான்ஸிலே தொடங்கிய கைத்தொழில் புரட்சியையும், பிரெஞ்சுப் புரட்சியையும் நாம்கற்க வேண்டும்—என்றார்.

அதனை நாம் விளங்கிக்கொள்வோமாயின் எமது நடைமுறை அரசியலை விளங்கிக்கொள்வது இலகுவானதாக இருக்கும்.

பிரான்ஸ் தேசத்துக் கலை, கலாசாரம் மிகவும் உன்னத நிலையில் இருக்கின்றது.

பிரான்ஸ் நாட்டில் உள்ள சிலைகளையும் சிற்பங்களையும் அப்புறப் படுத்திவிட்டே அந்நாட்டின்மீது குண்டு போட வேண்டும் என்று இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லர் கூறியதாக அறிகின்றோம்.

இதிலிருந்து பிரான்ஸின் கலை கலாசாரச் சிறப்புக்குறித்து நாம் ஓரளவு உணர்ந்து கொள்ளமுடியும்'' என்றார் அவர்.

இவ்விழாவில் சங்கநிர்வாகி திரு. இராஜலிங்கம், மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர் (உ-5)

# நெடுந்தீவுக் கடலில் மீன் பிடிக்க முடியாத நிலை

நெடுந்தீவு, ஜூலை 20

நெடுந்தீவுக் கடலில் இழுவைப் படகுகள் மூலம் மீன் பிடித்துக்கொண்டிருந்த சுமார் இருநூறுக்கும் அதிகமான மீனவர்கள் இந்தியக் கடற்படையினரால் கரைக்குத் திரும்பும்படி பணிக்கப்பட்டனர். அப்பகுதியில் அவர்கள் தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் தமது தொழில்களைக் கைவிட்டுத் தமது இருப்பிடங்களுக்குத் திரும்ப நேர்ந்தது.

நெடுந்தீவுக் கரைகளிலும் துறைமுகத்திலும் நங்கூரமிடப்பட்டிருந்த அனைத்துப் படகுகளும் இங்கிருந்து வெளியேறிவிட்டன.

இப்படகுகளில் அநேகமானவை குருநகர்ப் பகுதி மீனவர்களுக்குச் சொந்தமானது எனக் கூறப்படுகிறது.

(ஓ-111)

## யாழ். பல்கலைக்கழக

# விவசாய பீடத்துக்கு 35 ஏக்கர் காணி கிடைக்கும்

கிளிநொச்சி, ஜூலை 20

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கென கிளிநொச்சி கண்டி வீதியில் சுமார் 35 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 25 ஏக்கர் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 10 ஏக்கர் காணி பல்கலைக் கழக நிர்வாகத்திடம் காணி அலுவலகத்தினால் விரைவில் கையளிக்கப்படும்.

ஏற்கனவே கையளிக்கப்பட்டகாணியில் மதில் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மதில் கட்டும் வேலைகளுக்கென முதற்கட்ட நிதியாக சுமார் 12 இலட்சம் ரூபாவை அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ்வேலைகள் அனைத்தும் யாழ்ப்பாணம் தெற்கு கட்டடத் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வையில் நடைபெறுகிறது.

இவ்வேலைகளைக் கிளிநொச்சி மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான திரு. கே. தேவசிகாமணி அண்மையில் சென்று பார்வையிட்டார். (ஓ-76)

## ஆலயப் பிரச்சினைகள்:

# இந்து இளைஞர்மன்றங்களே தீர்த்து வைக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை20

சைவ ஆலயங்கள் பற்றிய பிரச்சினைகள் தான் நீதிமன்றங்களுக்குப்போகின்றன; தீர்விற்காக உதவி அரச அதிபர் பணிமனைக்குச் செல்கின்றன.

மற்றைய மதங்களில் இப்படியான நிகழ்வுகள் ஏற்பட்டதைக் காண முடியவில்லை.

இதுபோன்ற பிரச்சினைகளை அந்தந்த ஊர்களில் உள்ள இந்து இளைஞர் மன்றங்களே முன்னின்று தீர்க்கவேண்டும்.

மாவட்ட இந்து இளைஞர் பேரவை பொதுச் செயலாளர் திரு. இ. தவகோபால் இவ்வாறு சொன்னார்.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக்குழுக் கூட்டம் அண்மையில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் பேரவையின் உபசெயலாளரும் தற்காலிகத் தலைவருமாகிய திரு சி. சி. வரதராசா தலைமையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. தவகோபால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தலைவரின் தலைமையுரையில் மன்றங்கள் அவ்வூர் ஆலயங்களின் வழிபாடு ஒழுங்குபற்றி கவனிக்க வேண்டும் என்றும்—

அவ்வூர் இளைஞர்கள் சமயபக்தியுடன்சமுதாய முன்னேற்றத்துடன் வாழ பாடுபட வேண்டுமென்றும் கோரினார்.

கசிப்பு தயாரிப்பு, விற்பனை ஆகியவற்றை உடனடியாக தடுப்பதற்கும் —

சந்தைதவிர்ந்தஏனைய இடங்களில் அனுமதிப் பத்திரமற்ற வகையில் திறந்திருக்கும் மினி ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகளை உடனடியாக மூடச்செய்யும்படியும் —

கிராம சேவகர்களுக்கு சுற்று நிருபம் அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபரைக் கோருவதென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-க)

## தங்கப் பதக்கங்கள் தந்தையிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மத்திய கல்லூரியில் கல்விகற்ற ஞா. செந்தீஸ்வரன் கொழும்பு விவேகானந்த சபையால் நடத்தப்பட்ட சைவசமயப் பரீட்சையில் 1978ஆம் ஆண்டில் 8ஆம் தரத்திற்கான தங்கப் பதக்கத்தையும், 1980 ஆம் ஆண்டு 10ஆம் தரத்திற்கான தங்கப்பதக்கத்தையும் பெற்றிருந்தார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் அப் பதக்கங்கள் அவருக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இது தொடர்பாகக் கல்லூரி அதிபர் வே. பாலசுந்தரம் பிரஸ்தாப சபையுடன் தொடர்பு மேற்கொண்டதை அடுத்து அண்மையில் இந்தத் தங்கப்பதக்கங்கள் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

செந்தீஸ்வரன் தற்பொழுது ஜேர்மனியில் கல்வி பயில்வதால் தங்கப் பதக்கங்கள் அவரது தந்தையிடம் கையளிக்கப்பட்டன. (ஓ-9)


இதோ!

உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த

லீடா

முழு ஆடைப்பால்மா

வசதியான பக்கட்களில்




விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிட்டெட்
த. பெ. இல: 100,
கொழும்பு – 1

400 கிராம் பககட் ரூ. 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 85/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 162/=

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்


# மலையகத்தில் நடைபெறுவதை வன்செயல் என்று கூறலாமா?

## தொண்டமான் கேள்வி

கொழும்பு, ஜூலை 20

மலையகத்தில் வன்செயலா?

வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் நடைபெறும் வன்செயல்களைப் பார்க்கும்போது மலையகத்திலும் வன்செயல் என்று உங்களால் கூறமுடியுமா?

இப்படிக் கேட்டார் அமைச்சர் தொண்டமான்.

அண்மையில் தோட்ட சூப்பிரின்டன், உதவி சூப்பிரின்டன்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பற்றி செய்தியாளர் ஒருவர் அமைச்சர் தொண்டமானிடம் கேள்வி எழுப்பினார்.

அப்போதே அமைச்சர் இப்படிச்சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:

தோட்டங்களில் வன்செயல் என்று சொன்னால் அது சூப்பிரின்டனுக்கும் தொழிலாளருக்கும் இடையேயாகத் தான் இருக்கும்.

எப்போது பார்த்தாலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினுள் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தினர் ஊடுருவல் செய்துள்ளனர் என்று கூறுகின்றனர்.

இப்படிச் சொல்வதன் நோக்கம் என்ன? ஒரு தனிநபர் — அமைப்பு, அரசியல் கட்சி ஏதாவது ஒன்றில் சேருவதைத் தடுக்க முடியாது. அப்படி உறுப்பினர் சேருவது இ. தொ. கா. தலைமைத்துவத்துக்கு சவாலாக அமையுமா என்பது வேறு விஷயம்.

குறிப்பிடத் தக்க எண்ணிக்கையில் இல்லாமல் [illegible] பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?

உங்கள் உடலில் கொசுக்கள் வந்து உட்காருகின்றன. நீங்கள் கவலைப்படுகிறீர்களா? நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்? அவை அடுத்த நிமிடம் பறந்து போய்விடும்.

கட்டுப்பாடு என்ற பெயரில் இன்று [illegible] பல துன்பங்கள் [illegible] உள்ளன.

தோட்டங்களில் அமைதியை இராணுவமின்றி ஏற்படுத்துவேன் என்று உறுதி கூறி இருக்கிறேன்.

தோட்ட அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கும் தொழிலாளருக்கும் சம்பந்தமே இல்லை.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (இ-எ)

## கருத்தரங்கு

வேலணை ஜூலை 20

யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் பொருளாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 24-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9–00 மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் திரு. ச. ஞானப்பிரகாசம் [illegible] க்கு தலைமை வகிப்பார். (இ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரணம் ரூ 4 ஆயிரமாக அதிகரிப்பு

மானிப்பாய், ஜூலை 20
கடந்த கால அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட முழுநேர விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களம் வழங்க விருக்கும் நிவாரணப் பணம் 2000 ரூபாவிலிருந்து 4000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் விவசாயத்திணைக்கள அதிகாரி ஒருவர் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்,

## விவரம் சேகரிக்கும் வேலை ஆரம்பம்

பாதிக்கப்பட்ட முழுநேர விவசாயிகள் பற்றிய விவரம் சேகரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் விவசாயசேவை நிலயங்கள், கமத்தொழில் சேவை நிலயங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன.
விவசாய திணைக்களத்தில் இப்பொழுது கிடைத்துள்ள விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.
நிவாரணம்பெற தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டவுடன் நிவாரணம் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.
இப்படி அந்த அதிகாரி கூறினர்.
மேலும் விவசாய அடையாளக் கார்ட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும், உணவு முத்திரையை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு நிவாரணப்பணம் தவருது கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (இ-90)

## சனசமூக நிலைய செயலாளர் கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 20
1987ஆம் ஆண்டுக்குரிய சனசமூக நிலயங்களுக்கான அரச நன்கொடைப் பணத்தை துரிதமாக வழங்குமாறும், இதுவரை சனசமூக நிலயங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படாதிருக்கும் நன்கொடைப் பணத்தை நல்ல முறையில் இயங்கும் சனசமூக நிலயங்களுக்குப் பகிர்ந்து கொடுக்குமாறும் யாழ். மாவட்ட சனசமூக நிலயங்களின் ஒன்றியச் செயலாளர் திரு. எஸ். எஸ். வரதராசா யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரைக் கோரியுள்ளார். (160)

## காங்கேசன் கூட்டுத்தாபனத் தலைவர்

கொழும்பு ஜூலை 20
உள்ளூராட்சி வீடமைப்புத்துறை அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றும் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் அவரது தற்போதய பதவியோடு காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத்தாபன தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை இப்பொழுது அதன் உச்ச அளவுக்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. (இ-6)

## சேவைநலம் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 20
உயர்வு தாழ்வு இன்றி சகலருக்கும் கல்வி கிடைக்க வேண்டும். இவ்வித உயர்ந்த இலட்சியத்துடன் பாடசாலையிலுள்ள சகலரையும் மதித்து அன்புடன் சேவை செய்தவர் அதிபர் திரு. கணேசதாசனுவார்.
யாழ். இளையதம்பி வித்தியாலயத்தில் கடந்த ஏழு ஆண்டுகளாக கடமையாற்றி தற்பொழுது கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய அதிபராக கடமை ஏற்றுச் சென்ற திரு. கா. கணேசதாசனுக்கு நடைபெற்ற சேவைநலம் பாராட்டுக் கூட்டத்தில் பேசியகல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி இவ்வாறு கூறினர்.
இளையதம்பி வித்தியாலய புதிய அதிபர் திரு. க. செல்வரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (ஒ-சி)

## கண்டெடுக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 20
கண்டெடுக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகள் பலவும் உதயன் காரியாலயத்தில் பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
உரியவர்கள் 292/2 நாவலர் வீதி, உதயன் காரியாலயத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
465380504 V கதிரவேலு தங்கேஸ்வரி.
500753692 V செல்லத்துரை சபாரத்தினம், புலோப்பளை.
606452926 V யோகலிங்கம் சிவரஞ்சி, தண்ணீரூற்று.
677781033 X புஸ்பகலா நமசிவாயம், மட்டக்களப்பு.
295430931 X உலகநாயகி சிவப்பிரகாசம், கோப்பாய் தெற்கு.
531925459 V தருமலிங்கம் தேவராசா, சாவகச்சேரி.
673371787 V யோகரட்ணம் நிரஞ்சன், நல்லூர்-யாழ்ப்பாணம்.
685850559 V செல்லத்துரை சித்திரா, தெல்லிப்பளை.
387061258 V விக்கினேஸ்வரி சிவபாலன், வண்ணார்பண்ணை.
416800030 V மீனும்பாள் சின்னையா, மடுக் கோயில்.
456430996 V தேவபுஷ்பம் தேவதாசன் ஏழாலை.
442382514 V சுப்பிரமணியம் தங்கத்துரை, தம்பலகாமம்.
320150248 V வீரகத்தி செல்வராசா, யாழ்ப்பாணம்-கொக்குவில்.
646560730 V மயில்வாகனம் மாலதி, மயிலிட்டி.
431572010 V இளையதம்பி ஜீவரத்தினம் பண்டாரவளை.
52325392 X அமரசிங்கம் கமலானந்தன், சண்டிலிப்பாய் வடக்கு.
638642700 X ஆறுமுகம் சிவரத்தினபதி, விஸ்வமடு.
603601092 V முருகுப்பிள்ளை குணேந்திரன், காங்கேசன்துறை.
600921606 V இராமச்சந்திரன் சந்திரகிருஷ்ணர், நல்லூர்.
407961285 V நாகேஸ்வரி பூபாலசிங்கம், புதுக்குடியிருப்பு.
511923123 V யூலியன் அன்ரனி யோசப், திருகோணமலை.
643042932 V பொன்னம்பலம் பிரபாகரன் மட்டுவில்.
076920834 V குஞ்சாட்சி சின்னத்தம்பி நெடுந்தீவு.
273471332 X கந்தையா விநயகமூர்த்தி கழுவானை.
426040158 V தவமணிக்கன் வசாவிளான்.
மாணவர் அடையாளக் கார்ட்டுகள்.
கே. சசிவன்னம், நம்பர் 1818 காரைநகர்.
யே. யோகராஜா, நம்பர் 4196 வட்டுக் கோட்டை.
சுபாஜினி துரைசாமி வல்வெட்டித்துறை.
துரேஸ்வரி வேலாயுதம் உடுவில் மகளிர் கல்லூரி சுன்னுகம்.
சாரதி லைசென்ஸ் குமாரசாமி திரவியராஜா நம்பர் 018879

# பிரச்சினைகளைத் தீர்த்து ஒற்றுமையுடன் செயற்படுவோம்

## எஸ். டி. எஸ் கூறுகிறர்

சென்னை, ஜூலை 20
''கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விரைவில் தீர்த்து ஒற்றுமையுடன் செயல்படுவோம்'' என்று முன்னுள் அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் நம்பிக்கை தெரிவித்தார்.

### சமரச முயற்சி

அ. தி. மு. க. (ஜெயலலிதா அணி) வில், முன்னணி தலைவர் நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் பண்ருட்டி ராமச்சந்திரன், பொருளாளர் திருநாவுக்கரசு ஆகியோர் கட்சியில் ஏற்பட்ட பூசல் காரணமாக ஒதுங்கி இருக்கிறர்கள்.
அவர்களை சமாதானப்படுத்தி, மீண்டும் கட்சிப் பணியில் ஈடுபடுத்தும் பணியை பொதுச் செயலாளர் ஜெயலலிதா சார்பில், முன்னுள் அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் தீவிரமாக இறங்கி உள்ளார்.
சமரச முயற்சியில் ஏற்பட்டு இருக்கும் முன்னேற்றங்கள் குறித்து சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில், எஸ். டி. சோமசுந்தரம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.
அப்போது அவர் கூறியதாவது:-
நாங்கள் எல்லோரும் ஒரே கட்சியில் இருந்தவர்கள்தான். இப்போது ஒரே கட்சியில் தான் இருக்கிறோம். இப்போதும் ஏற்பட்டுள்ள பிரச்சினை பெரிய விஷயம் இல்லை, எல்லா கட்சியிலும் இருக்கும் பிரச்சினை தான்.

### மதிப்பு

நாவலருக்கு நாங்கள் பெருமதிப்பு கொடுக்கிறோம். பொதுச் செயலாளர் ஜெயலலிதா, நாவலருடைய வீட்டுக்கு சென்று நேரில் சந்தித்து பேசி இருக்கிறர்.
இதில் இருந்தே நாவலர் மீது நாங்கள் வைத்திருக்கும் மதிப்பையும் மரியாதையையும் தெரிந்து கொள்ளலாம். தொண்டர்களுக்கு இது நம்பிக்கை ஊட்டும் செய்தி ஆகும்.

### நேரில் சொல்லலாம்

பொதுச் செயலாளர் ஜெயலலிதா, கட்சி வளர்ச்சிக்காக ஆக்கப்பூர்வமான எந்த காரியத்தையும் எடுக்கலாம். அதன் படிதான் அரசியல் விவகார குழு கலைக்கப்பட்டு உள்ளது.
யாராக இருந்தாலும் தங்கள் குறைகளை அல்லது செய்ய வேண்டிய காரியங்களை பொதுச் செயலாளரிடம் எப்போதும் சொல்லலாம். இவற்றை கலந்து பேசி முடிவு எடுக்கலாம்.

### நம்பிக்கை

அனைவரும் மீண்டும் கட்சிப் பணியில் முழு மூச்சுடன் இறங்குவார்கள். இந்த நம்பிக்கை எனக்கு முழுமையாக உள்ளது:
இவ்வாறு எஸ். டி. சோமசுந்தரம் கூறினர். (எ-4)

# பிரச்சினைக்குத் தீர்வு இல்லை; திருநாவுக்கரசு பேட்டி

சென்னை, ஜூலை 20
முன்னுள் மந்திரி திருநாவுக்கரசு பேட்டி அளித்தார். அதன் விவரம் வருமாறு:-

### தீர்வு இல்லை

கேள்வி:- ஜெயலலிதா நெடுஞ்செழியனைச் சந்தித்து பேசிய பிறகு நீங்கள் நெடுஞ்செழியனுடன் பேசினீர்களா?
பதில்:- பொதுச்செயலாளரும் (ஜெயலலிதா) நெடுஞ்செழியனும் சந்தித்து பேசிய பிறகு டெலிபோனில் நாவலருடன் தொடர்பு கொண்டேன். அவர்கள் என்ன பேசினர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனல் டெலிபோனில் பேசியதிலிருந்து நான் தெரிந்து கொண்டது, பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டதாகத் தெரியவில்லை. பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன.
கேள்வி:- எஸ்.டி.எஸ் தூது முயற்சி வெற்றி பெறும் என்று கருதுகிறீர்களா?
பதில்:- எஸ்.டி. சோமசுந்தரம் மாறி மாறி எங்களைச் சந்தித்தாரே தவிர நாங்கள் தெரிவித்த குறைபாடு, வேதனை, பிரச்சினைகளை பொதுச் செயலாளரிடம் சொன்னதாகத் தெரியவில்லை. பிரச்சினைக்குத் தீர்வு எதையும் அவர் சொல்லவும் இல்லை.

### உள் நோக்கம்

கேள்வி;- நெடுஞ்செழியனை ஜெயலலிதா சந்தித்ததே பெரிய மரியாதை என்று எஸ். டி. எஸ். கூறி இருக்கிறரே?
பதில்:- மூத்த தலைவர் எஸ். டி. எஸ். அவர் இப்படிச் சொல்லி இருப்பது வருந்தத்தக்கது. அவர் எங்களைச் சந்தித்ததில் உள்நோக்கம் ஏதும் இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.
கேள்வி:- நாவலரைச் சந்தித்த ஜெயலலிதா உங்கள் இரண்டு பேரையும் (பண்ருட்டி - திருநாவுக்கரசு) சந்திக்கவில்லையே?
பதில்:- எங்களில் யாரைப் பார்த்தாலும் சரிதான்.

### அவசரம் இல்லை

கேள்வி:- பிரச்சினை தீர காலக்கெடு ஏதாவது உண்டா?
பதில்:- அவசரம் எதுவும் இல்லை.
இவ்வாறு அவர் கூறினர். (எ-4)

## பால் மா விநியோகம் நிறுத்தம்

வடமராட்சி ஜூலை 20
மந்திகை ஆதார வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கான பால் மா விநியோகம் கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது.
இதனல் சிறு குழந்தைகள் முதல் பெரியோர் வரையிலான நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிவருகின்றனர்கள்.

திரு. முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின் 3 ஆம் ஆண்டு

குரு பூசை

உயர்திரு முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின் 3 ஆம் ஆண்டு குரு பூசைத் தினம் வரும் 21-7-88 வியாழக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற இருப்பதால் அத்தினத்தை அடியார்களும், அன்பர்களும் வருகைதந்து சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம். அத்துடன் திரு. சுவாமி அவர்களின் அன்னதானத் தொண்டை நிலை நிறுத்தும் வண்ணம் ஆலயத்தை அண்டியுள்ள நோயாளர்கட்கும், வயோதிபர்கட்கும் தினசரி அன்னதானம் வழங்கப்படுகின்றது என்பதையும் இத்தால் சகலருக்கும் பணிவன்புடன் அறியத் தருகின்றோம்.

இவ்வண்ணம்
சந்நிதியான் ஆச்சிரம அன்பர்கள்
(5338)

A/L 90

THE EXPRESS INSTITUTE KOPAY

கணித வகுப்புகள்
BY திரு. வெக்டர்

சனி, ஞாயிறு வகுப்புகள்
PURE 1-00 - 2-00 p. m.
APPLIED 2-00 - 3-00 p. m.
BASIC MATHS 3-00 - 4-00 p. m.
(கணித/விஞ்ஞான பிரிவினர் இருவர்க்கும்)

20-07-88 புதன்
பி. ப. 4-30க்கு ஆரம்பம்

BASIC MATHS
BY திரு. தயாளன்
சனி, ஞாயிறு — 12-00 மணி
(C-5900)

A/L 90
சனி, ஞாயிறு வகுப்பு

1.15:
பிரயோக கணிதம்
2.30:
தூய கணிதம்

ஆரம்பம்:
23. 7. 88

ஆசிரியர்:
திரு. ரவி மோகன்
யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)
(5806)

மீண்டும் மணிக்கூட்டு வீதியிலிருந்து...



எமது வழமையான சேவைகளை ஆரம்பித்துள்ளோம்.
- உங்கள் மனம் கவர் யாழ் வேட்டி, சால்வை
- நீடித்து உழைக்கும் மின்தறி உற்பத்திகள்
- தரம் மிக்க கைத்தறிப் புடைவைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்,
- புடவை பதப்படுத்தலும் நடைபெறுகிறது.

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
6/2, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(C 5804)

## நினைவஞ்சலி



நிலாவெளிப் பொறுப்பாளர் கப்டன்
**கிங்சிலி (வ. சிவகுமார்)**
தமிழ் இனத்தின் விடிவிற்காக இணைவு 1982

தாய்க்குச்சேயாக: 22 - 12 - 1963
ஈழத்தமிழர் விடிவிற்காக: 18 - 5 - 1988

ஈழத்தமிழ் மண்ணைக்காக்க
சென்ற வீரவேங்கையே
பாசத்தின் ஒரு மகனே
ஆசைக்கோர் தம்பியே
உன் இனிய முகத்தை
காணுமல் துடிக்கும்

குடும்பத்தினர்,
உறவினர்கள், நண்பர்கள்.

(5340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் திருமுகம்

# ஒரு தொற்று நோய் பரவி வருகிறது

யாழ்ப்பாணத்திலும் இதர தமிழ்ப் பகுதிகளிலும் மிகவேகமாக ஒரு தொற்றுநோய் பரவி வருகிறது.

இந்நோய் குறிப்பாக 15 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய இளைஞர்களில் இலகுவாகத் தொற்றுகிறது.

இந்நோய் ''போதைப்பொருள்'' என்ற பூதம் தான். இந்நோய் சாதாரணமானதல்ல. இது ஓர் இனத்தின சுபிட்சத்தையும், எதிர்காலத்தையும் குழிதோண்டிப் புதைக்கவல்லது. இது உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஏற்படுத்தப் போகும் பாதிப்புக்களை சொல்லில் அளக்க முடியாது

ஏற்கனவே நொந்துபோயிருக்கும் எமது சமுதாயத்துக்கு இது வெந்தபுண்ணில் வேல்பாச்சுதல் போலாகும்.

இதுவரை போதைப்பொருள்கள் வராத இந்த தமிழ் மண்ணில் திடீரென விசுவருபம் எடுப்பது எங்ஙனம்? ஏன்? என்ற கேள்விகள் ஆராயப்பட வேண்டியவைதான், ஆனாலும் அதற்கு முன் எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் உள்ளன.

மாணவர்களிடையே இப்பழக்கம் மிகவேகமாக பரவி வருவதால் பெற்றோர்கள் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் இது சம்பந்தமான விழிப்புணர்ச்சி தேவை. போதைப்பொருள் பாவனைக்கு எதிரான பிரசாரங்களை சமூகசேவை ஸ்தாபனங்களும் பத்திரிகைகளும் முடுக்கிவிட வேண்டும்.

நிச்சயமாக இப்படிப்பட்ட சமுதாய நலன் விரும்பிகளால் தான் பாதிப்புகளின் வீரியத்தை குறைத்து அறவே நீக்கமுடியும்.

ஏற்கனவே நொந்துபோயிருக்கும் எமக்கு இந்த 'போதை அரக்கன்' எதிர்காலத்தில் சொல்லொணாத் துயரத்தை தரப்போகிருன். எமது பெற்ருேர்களும் நிச்சயம் இதைத் தாங்கிக்கொள்ளப் போவதில்லை.

இன்றே நாம் செயல்படத் தொடங்குவோம் இந்த போதை 'அரக்கனுக்கு' எதிராக.

இல்லையேல் இனி நாம் அதோ கதி!

யாழ்ப்பாணம் — செ. ஸ்ரீ முகுந்தன்


# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

1. Saudi Arabia: சவூதி அரேபியா:

**Saudi Operation & Maintenance Company Limited**

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. Electrician | — | SR 600 |
| 2. Mechanic | — | SR 600 |
| 3. A/C. Technician | — | SR 700 |
| 4. Electrical Engineer | — | SR 2000 |
| 5. Plumber | — | SR 600 |
| 6. Drivers | — | SR 600 |
| 7. Masons | — | SR 600 |
| 8. Carpenters | — | SR 600 |
| 9. Eletronic Technician | — | SR 700 |
| 10. Telephone Technician | — | SR 600 |
| 11. Telephone Operator | — | SR 700 |
| 12. Power Plant Operator | — | SR 700 |
| 13. Power Plant Mechanic | — | SR 700 |
| 14. Power Plant Electrician | — | SR 700 |
| 15. Painter | — | SR 600 |
| 16. Welder | — | SR 600 |

WITH FOOD ALLOWANCE

Age - 21 - 49 years

FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்

2. Kuwait: குவைற்:

United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T.V. TRAVELS & TOURIST

BROWN ROAD, (Railway Station Front) KOKUVIL.

(C 5869)


தம்பன்கடவை தமிழர்கள் கையிலிருந்து மாறிய கதை

# தமிழர் வாழ்ந்த கிராமங்கள் வனவிலங்குப் பாதுகாப்புப் பிரதேசமாக மாற்றப்பட்டுவிட்டன!

(பகுதி இரண்டு)

17-7-88 உதயனில் வெளியானகட்டுரையின் தொடர்ச்சி)

1960 ல் இருந்து 1980 வரை கினிதமளை யக்காநட்டுவெவ, தளுக்காளைக்குளம், அல்லவெவ, மகாவெவ, கல்வெவ, கடவளககுளம், சிங்காரிக்குளம், கடவத்தமடுக்குளம், அறலகங்குளம், பிம்புறத்தவ ஆகிய குளங்களைக்கட்டி குடியேறிய சிங்களவர்களுக்கு வசதி செய்து கொடுத்த சிங்கள அரசுகள் —

தமிழர்களின் கிராமங்களில் இருந்த சில குளங்களை அரைகுறையாய் பழுதுபார்த்து தமிழர்களின் பிரதான விளை நிலங்களுக்கு நீர் பாயும் வாய்க்காலையும் மறித்துவிட்டனர்.

அடுத்து பால் உற்பத்தியில் தமிழர்களைச் சுரண்டத் தொடங்கினர். ''கல்லால்ல'' யில் அமைக்கப்பட்ட கட்டிப் பால் தொழிற்சாலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களையே வேலைக்கமர்த்தினர். பால் வாங்குவோர், தரமிடுவோர், விலைமதிப்போரெல்லாம் சிங்களவர்களாகவே இருந்து பால் உற்பத்தியளார்களான தமிழர்களைப்பல வழிகளிலும் சுரண்டி வருகின்றனர். காண்டகாடு. மிருகவளர்ப்புத்திட்டம், வெலிக்கந்தை மிருகவைத்திய நிலையம், கல்லால்ல கட்டிப்பால் தொழிற்சாலை ஆகிய இடங்களில் சிங்களவர்கள் மாத்திரமே வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால் பால் உற்பத்தியாளர்களெல்லாம தமிழர்களே.

### கல்வியிலும் வஞ்சம்

தம்பன்கடவை வாழ் தமிழர்களின் பொருளாதாரத்தை வீழ்த்தியது போலவே கல்வியிலும் வஞ்சம் தீர்த்தனர். வெலிக்கந்தை, மா

குப்பை பகுதிகளில் வாழ்ந்த தமிழர் வெளியேற்றத்தொடங்கவெலிக்கந்தையில் இருந்த தமிழ் பாடசாலை 1970ல் சிங்களப் பாடசாலையாக மாறியது. காண்டகாடு மக்கள் வெளியேறிய க்இப்பகுதியில் ஐந்து தமிழ் பாடசாலைகளே எஞ்சியுள்ளன. ஆனால் சிங்கள மாணவர்களுக்கு நான்கு பெரும் மகாவித்யாலயங்களும் 15 க்கு மேற்பட்ட சிறுபாடசாலைகளும் தற்போது தம்பன் கடவையில் உள் நாமஞ் சூட்டப்பட்டு ஸ்ரீலங்கா படைகளினல் கைது செய்யப்பட்டதும் உண்டு. இவர்களில் சிலர் இன்னும் சிறைகளிலே வாடுகின்றனர்; வேறு சிலர் காணுமற் போயுள்ளனர்.

## மாதுறுஓயாத் திட்டத்தில் காணி பெறுவதற்குத் தகுதியில்லை என நிராகரிப்பு

பின் 1975 ல் காண்டகாடு பாடசாலையும் சிங்கள மயமானது. சொறிவில் தமிழ் வித்தியாலயம் சிங்கள வித்தியாலயமாக மாறி தமிழ் ஒருபகுதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது ளன.

இவ்வாறான பேரினவாத நெருக்கடிகளால் நசுக்கப்பட்ட தம்பன் கடவைத் தமிழர்கள் கிழக்கு நோக்கி அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ ஆரம்பித்தனர்.

காண்டகாடு கிராம மக்கள் மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசமான கட்டுமுறிவு, கதிரவெளி ஆகிய பகுதிகளிலும் — முத்துக்கல், பத்தாவைச்சேனை, சொறிவில், புதுவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மட்டக்களப்பின், வடமுனை ஊற்றுச்சேனை ஆகிய பகுதிகளுக்கும் — இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

### காணிக்குத் தகுதியில்லை என நிராகரிப்பு

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் மாதுறுஓயாதிட்டத்தால் தம்பன்கடவை பொறுப்பேற்கப்பட்டு பிரிவு ''B'' பகுதியாக்கப்பட்டு தமிழர்களின புராதன கிராமங்கள் யாவும் அழிக்கப்பட்டு வனவிலங்குப் பாதுகாப்பு பிரதேசமாக ஒதுக்கி விட்டனர். தம்பன் கடவையில் வாழ்ந்த தமிழர்களில் நூற்றுக்குமேற்பட்டோர் பயங்கரவாதிகள் என

தம்பன் கடவையிலிருந்து அகதியாகவெளியேறிய தமிழர்கள் போக எஞ்சி நின்ற தமிழர்களை மாதுறுஓயாத் திட்டத்தில்காணிபெறத் தகுதியற்றவர்கள் என்ற காரணங் காட்டி, ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை ஒதுக்கி விட்டனர். மிகுதிப் பேரை திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் மத்தியில், பிரித்தும், தனித்தும் குடியமர்த்தியுள்ளனர். தற்போது தமிழர்கள் நடிப்பற்றப்பட்ட கிராமங்களின் பெயர் திம்புலாகல, மருதங்கல, சேனபுர' செவனப்பிட்டிய என்பனவாகும்.

இதுவரை சுமார் 10, 000, சிங்களக்குடும்பங்கள் தம்பன் கடவையில் குடியேற்றப்பட்டுள்ளன. சகல அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சிங்களவர்களே. பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர்கள் கூட சிங்களவர்களாகவே இருப்பதால் இங்கு மிஞ்சியுள்ள தமிழர்களின் குழந்தைகளின் பெயர்கள் கூட சிங்களப் பெயர்களாகவே இருக்கும் அபாயம் உண்டு. சந்திரசேகரம், சந்திரசேகரா வென்றும் கருணைரெத்தினம், கருணாரத்ன வென்றும் மாற்றப்படுகிறது.

தம்பன் கடாவை மக்கள் பேரினவாதத்தால் தங்களுக்கு ஏற்படும் துன்பங்களை தமிழ் தலைவர்கட்கு அவ்வப்போது தெரியப்படுத்தி வந்துள்ளனர். மேலும் இப்பிரச்சினை சம்பந்தமாக இந்திய அமைதிப்படை அதிகாரிகளிடமும் 2 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அண்மையில் கையளித்துள்ளனர்.

அந்தக் கோரிக்கைகள் வருமாறு:-

1. தம்பன் கடவை தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது

2 தம்பன் கடவையில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரையும் (இந்திய வம்சாவளித்தமிழர்கள் உட்பட) மீண்டும் தம்பன் கடவையில் குடியமர்த்துதல்.

காணி பெறத் தகுதியற்றவர்கள் என்று ஒதுக்கியவர்களுக்கும் மாதுறுஓயா திட்டத்தில்காணிவழங்குதல்

3 சகல தமிழ் பேசும் மக்களையும் ஒரே இடமாகக் குடிமர்த்துதல்.

4 தம்பன் கடவை தமிழ்பேசும் மக்களுக்கென ஒரு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்றை அமைத்துக் கொடுத்தல்.

திருகோணமலை, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தனியாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தம்பன்கடவையில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தமிழர்களுக்கு நேர்ந்த கதி எல்லைப் பிரதேசங்களான வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களுக்கும் ஆரம்பமாகியுள்ளது.

(முற்றும்)

- த. பேரின்பநாதன் -

மூன்று நன்நோக்கங்களை விளங்க வைத்து

# ஆக்கவழி காட்டிய அமரர் கே. ஸி. தங்கராசா

தமிழ் மக்களுக்கு பல்வேறு துறைகளில் அளப்பரிய சேவை புரிந்தவரும் 'ஈழநாடு' ஸ்தாபகருமான திரு. கே.ஸி.தங்கராசாவின் முதலாவது ஆண்டு நினைவு தினம் இன்று 20-7-88 ஆகும்.

அவரின் சேவைகளைப் பல்வேறு கோணங்களில் நின்று நோக்கும் இக் கட்டுரை அவரது முதலாவது நினைவு தினத்தையொட்டி இங்கு பிரசுரிக்சப்படுகிறது.

நாடும் இனமும் வாழ வேண்டும்மென்ற கருணை நோக்கினல் இறைவனுல் அவ்வப்போது அனுப்பப்படுகின்றபுனித பிறவிகளை அவதாரம் என்று கூறுவதில் தவறில்லை. தான் பிறந்த தனல் தன் நாட்டுக்கு நலம்பல விளைந்திருக்குமானல், அப் பிறப்பைத் தானே முன்னின்று போற்றவேண்டும்என்று கூறுகின்ருர் சுவாமி விவேகானந்தர். இத்தகையபுனிதப் பிறவியாக பரந்தபடிப்பும்உயர்ந்த உள்ளமும், விரிந்த நோக்கும் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்தவர் அமரர் கே. ஸி. தங்கராசா அவர்கள்.



1972ஆம் ஆண்டு காஞ்சி மெய்கண்டாராதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அமரர் தங்கராசா அவர்களின் சந்திப்பு எனக்குக் கிடைத்தது. அந்தச் சமயத்தில் யாழ்ப்பாணம் இலக்கண சுவாமிகள் பற்றிய பேச்சும் எழுந்தது. மிகவும் பெருமிதமாக சுவாமிகள் கூறிய ஒரு வசனம் இன்றும் என் நினைவில் இருக்கிறது.

அதாவது இலக்கண சுவாமிகளிடமே தாம் பாடங் கேட்டு நுண்ணறிவு பெற்றதைப் பாராட்டி ''அப்பெரியாரின் மருகர்இவர்'' என்று எனக்கு அமரர் தங்கராசா அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

யாழ்ப்பாண மக்கள் செய்த தவப்பயனாக விளங்கிய குடும்பம் இவர்களுடைய குடும்பம். கல்வித்துறை, வைத்தியத்துறை, பண்பாட்டுத்துறை, கடவுட் பணி சமூகநலன் அனைத்தையும் கட்டிக்காத்த

ஒரு மேம்பாடு வாய்க்கப் பெற்ற குடும்பத்தில் அவதரித்த சிறப்பினல் பெரியாரின் உள்ளம் நல்ல சிந்தனையில் உயர்ந்தோங்கி நின்றது.

''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' என்ற கொள்கையோடு வாழ்ந்த தந்தையின் வழியிலும், செல்விருந்தோம்பி வருவிருந்து சாத்திருந்த அன்னையின் நெறியிலும், நாட்டுக்கு நல்ல செய்வதற்கு ஒரு அச்சகம் நிறுவ வேண்டுமென்று அடி எடுத்துக் கொடுத்த தாய் மாமனுரின் எண்ணத்திலும்,

தமிழனுக்கென்று ஒரு தனித்துவமான நாளேட்டை (ஈழநாடு) அவர் ஆரம்பித்து வைத்தமையை மறக்க முடியுமா? தமிழ் பேசும் மக்கள் இந்த ஒரு பணியையே உச்சிமேல் கை வைத்துப் போற்றி நிற்கக் கடமைப்பட்டவர்கள். ஆனல் இந்த ஒன்று மாத்திரமா? எத்தனை எத்தனை விதத்தில் அமரர் பணி ஓங்கி நின்றதை இன்று தமிழ் கூறு நல்லுலகம் நன்கு அறியும். ஏனைய இனத்தவரும் இதனைப் பாராட்டுகின்றதில் வியப்பில்லை.

''தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்'' என்ற கொள்கையில் வலுப்பெற்றிருந்த இப்பெரியாரின் கடவுட் தொண்டுக்குச் சான்ருக அமைந்தது யாழ் கதிரேசன் கோயில் அறங்காவலர் பணியாயாகும். அடக்கமாக எதனையும் செய்து நிறைவேற்றும் பண்பு மிக்கவர்களே ஆலயப் பணிகளுக்கு ஏற்றவர்கள். அந்த அமைதியான பணிகளில் ஈடுபாடு கொண்ட பெரியாரின் ஆதரவுக்கு ஈழநாடு

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

இவருள்ளம் முற்ருகத் தோய்ந்து விட்டமையாலும், மகாத்மா காந்தியடிகளின் வருகையினல் ஏற்பட்ட புனித எழுச்சியும் பிறந்த மண்ணைப் பற்றிய அபிமானமும் சேர்ந்தமையாலும், அமரர் அவர்களின் பணி சுடர் விட்டுப் பிரகாச வழி பிறந்தது எனலாம்.

வீட்டுக்கு உழைப்பவர்கள் பலர் பெருகி நிற்கும் இந்தக் காலத்திலே நாட்டுக்கு உழைத்த ஒரு நற்பிறவியைப் பற்றி எழுதிப் போற்றுவது எனக்குக் கிடைத்த ஒரு பேறு என்றே கருதுகிறேன்.

''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் உள்ளது நாடு'' என்ருர் வள்ளுவர். ஆம் யாழ்ப்பாணத்தின் பெருமையைக் கட்டிக்காரத்துநின்ருேர் [illegible]

காரியாலய அருகாமையில் விளங்கும் காவற் தெய்வம் ஞானவைரவர் ஆலயமும் எடுத்துக் காட்டாகும்.

மேலும் 1958ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் தாக்குண்டு தமிழ் மக்கள் தலைநகரில் அல்லலுற்ற ஞான்று தனிக்குரல் கொடுத்து சரஸ்வதி மண்டபம், கொழும்பு இந்துக்கல்லூரி ஆகிய இடங்களில் அகதிகளுக்குப் புகலிடம் அளித்து அறப்பணிச் செல்வராக விளங்கிய அமரரைத் தமிழ்பேசும் இனம் மறக்க முடியுமா?

சேவை செய்வோருக்குச் சிரிப்பும் சாந்தமும் வேண்டுமென்ருர் காந்தியடிகள். அமரர் அவர்களும் இந்தப் பக்குவத்தோடு காந்திய உறுதிப்பாடுகளை உள்ளத்திலே வைத்து வாழ்ந்தமையால், இன்றுஇலட்சோப [illegible] களில் இடம் பெற்றுள் [illegible] பார்க்க)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமைதிப் படையினரும் கலந்து கொண்ட பிரசைகள் குழுக் கூட்டம்

சாவகச்சேரி ஜூலை 20

சாவகச்சேரி பிரசைகள் குழுவின் கூட்டம் கடந்த சனிக்கிழமை டிறிபேக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரசைகள் குழுவின் தலைவர் சட்டத்தரணி திரு. வீ. இராசசங்கரி தலைமையில் ஆரம்பமான இக்கூட்டத்தில் சாவகச்சேரி இராணுவ முகாம் அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் எஸ். எஸ். திவோன், லெப்டினன்ட் என். தோமஸ் கொடிகாமம் முகாம் அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் எஸ்.ஜே.சந்து ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்திய வல்லரசு இங்கு அமைதிகாக்க இராணுவத்தை அனுப்பியது. அமைதியை விரும்பும் இராணுவம் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் எனகூட்டத்தில் கலந்துகொண்ட குழு உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

அமைதிப்படையினர் சென்ற பின்பும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

இம்மாதம் 24 ஆம் திகதி மௌன ஊர்வலம் நடத்துதல் 29ஆம் திகதி துக்க தினம் அனுஷ்டித்தல் ஆகியவை தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாணபிரசைகள் குழுவின் இணைப்புக் குழுவில் முடிவு செய்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ 31)


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 89**

1 வருட வகுப்பு

புவியியல் - க. குணராஜா, M.A.

சனி, ஞாயிறு - 2 மணி

ஆரம்பம் : 23-07-88

(C 5878)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அ. சுரேஸ்நாதன்**

பிறப்பு: 23. 7. 1968 இறப்பு: 20. 6. 1988

ஆரம்பக்கல்வியினை சென்யோசப் கல்லூரியில் (கொழும்பு) கல்வி கற்று - யாழ்நகர் வந்தடைந்து 1982 ஆம் ஆண்டுவரை ஸ்கந்தவரோதயக் கல்லூரில் கல்விகற்று சகல துறைகளிலும் சிறப்படைந்து - விளையாட்டுத் துறையில் அபரிமிதமான சாதனைகளை நிலைநாட்டி விசேஷமாக கல்லூரியில நடந்த விளையாட்டுப்போட்டியில் சம்பியனாகவும் தெரிவாகி யாழ். மாவட்டப் போட்டியில் ஈட்டி எறிதலிலும் தட்டெறிதலிலும் முதலாம் இடத்தைப் பெற்றார். சிறந்த கிரிக்கெட் பந்து வீச்சாளராகவும் புகழ்பெற்றார். வடமாகாணத்தில் ஒரு சிறந்த கோல் கீப்பராகவும் உதைபந்தாட்டப் போட்டிகளில் பிரசித்திபெற்று விளங்கினார்.

கல்வியில் ஒரே முறையில் O/L சித்தியடைந்து பின் ஓராண்டு A/L படித்துவிட்டு அவரது திறமையால் கப்பலில் சேர்ந்து வேலையைக் கெட்டித்தனத்துடன் செய்து பெரும் பணத்தைத் திரட்டிக் கொணர்ந்து பெற்ற கடனைத் தீர்த்துவிட்டு திரும்பவும் கப்பலில் பயணம் செய்ய ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் 20. 6. 88 அன்று காலை கொழும்புக்குப் பயணமாகையில் முருகண்டியில் வைத்துப்பிடிக்கப்பட்டு சதிகாரர்களால் பரிதவிக்க கொல்லப்பட்டார்.

நீதியற்ற இவ்வுலகில்
நிலைகலைந்து நெக்குருகும்
நெஞ்சங்கள் கருகின்ற
வேதனைச் சுவடுகள்
தீவாலையாய் எரிகின்றது

அவர் பிரிவால் வாடுகின்ற
அமிர்தநாதன் பெற்றோர், சகோதர, சகோதரிகள்.

(5329)

# வடபகுதி மீனவர்களுக்கு எந்தவித உதவியும் இல்லை

## 35 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் நிதி உதவிகளில் வடபகுதி மீனவருக்கு எந்த விதமான ஒதுக்கீடுகளும் செய்யப்படுவதில்லை.

கடற்றொழில் அமைச்சினுல் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த சலுகைகளும் கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்படவில்லை.

சாதாரணமாக வழங்கப்பட்டு வந்த மீனவர்களுக்கான உணவு முத்திரைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வடபகுதியில் உள்ள 35ஆயிரத்துக்கும் அதிகமான மீனவ குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சம்பந்தப்பட்ட கடற்றொழில் அமைச்சும் வெளிநாட்டு ஸ்தாபனங்களும் அக்கறை எடுத்து மீனவக் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை குருநகரில் நடைபெற்ற யாழ். மாவட்ட கிராம கடற்றொழில் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் அங்குரார்ப்பண விழாவில் மீனவர்களினுல் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்துக்கு அருட்திரு பி.எம். இம்மானுவல் அடிகளார் தலைமை வகித்தார்.

நூற்றுக்கும் அதிகமான அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், கூட்டத்துக்கு சமூகம் அளித்திருந்தனர்.

எமது மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதில் நிபந்தனைகளை ஏற்படுத்தும் இந்தியப் படையினர் இந்திய மீனவர்கள் எமது கடல் பகுதிக்குள் வந்து மீன் பிடிப்பதற்கு எவ்வாறு அனுமதிப்பார்கள்? இது நீதியாகுமா?

இது தொடர்பாக அபிவிருத்தி ஒன்றியம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடபகுதி மீனவர்களுக்கு காலம் தாழ்த்தாது கடற்றொழில் அமைச்சும், வெளிநாட்டு ஸ்தாபனங்களும் மறுவாழ்வு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அங்கு பகிரங்கமாக கோரிக்கைகளை எழுப்பினர்.

அவர்களின் கோரிக்கைகளை உரிய முறையில் உரியவர்களிடம் சேர்ப்பதற்கென யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புகளின் ஒன்றியமும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான பல அறிக்கைகளை சகல பகுதிகளிலும் இருந்து வந்து கலந்து கொண்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்றியத்திடம் கையளித்தனர்.

இதற்கேற்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஒன்றியம் சார்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## படையினர் பார்வையிட்டனர்

கோப்பாய் ஜூலை 20

கடந்த வருட அசம்பாவிதங்களின போது சேதமடைந்த வடகோவை சித்திர வேலாயுத சுவாமி கோவிலைப் புனரமைப்பதற்காக அமைதிப் படையினர் அதனை பார்வையிட்டனர். (இ-72)

## ஆதீனத்தில் பண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஜூலை 20

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்க பாடத்திட்டத்துக்கமைய பண்டித வகுப்புகள் நடைபெறுகின்றன.

சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இந்த இலவச வகுப்புகள் நடைபெறும்.

புதிய மாணவர்கள் ஜூலை 31 ஆம் திகதிக்குள் தமது விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பித்து வகுப்புகளில் சேரலாம் என அறிவிக்கப்படுகிறது

## வண்ணார்பண்ணையில் நூலகக் கிளை

யாழ்ப்பாணம் ஜூலை 20

யாழ்ப்பாண பொது நூலகத்தின் கிளை ஒன்று நாளை வியாழக்கிழமை வண்ணார் பண்ணையில் திறந்து வைக்கப்படும்.

நாச்சிமார் கோயில் பின் வீதியில் அமைந்துள்ள இந்த நூலகக் கிளையை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் நாளை காலை 10. 15 மணிக்குத் திறந்து வைப்பார். (ஒ-க)

## கைது

கொழும்பு, ஜூலை 20

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி அமைப்பாளர் விஜேகுமாரணதுங்காவைக் கொலைசெய்த சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபரை பொலீஸார் ஹொரணை காட்டுப் பகுதியில்வைத்துக் கைது செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

லியனகே என்பது அந்தச் சந்தேக நபரின் பெயர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ

# யாழ். சுகாதாரப்பகுதிக்கு வாகனங்கள் வருகின்றன

யாழ்ப்பாணம் ஜூலை 20

யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு இம்மாத இறுதியில் வாகனங்கள் சில வந்து சேர உள்ளன.

இவ்வாறு வந்து சேர உள்ள வாகனங்களில் இரண்டு அம்புலன்ஸ்களும், இரண்டு "பஜரோ" ரக ஜீப் வண்டிகளும் அடங்குகின்றன.

முன்னர் 7 அம்புலன்ஸ்களை வழங்க ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், முதற்கட்ட நடவடிக்கையாகவே தற்பொழுது 2 அம்புலன்ஸ்கள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு அம்புலன்ஸ்களும் சாவகச்சேரி, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படஉள்ளன. (ஒ - 9)

## சுடப்பட்டார்

குருநகர், ஜூலை 20

அச்சுவேலியைச் சேர்ந்த கிட்டி என்றழைக்கப்படும் மினிவான் சாரதி ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-51)

## பிரசைகள் குழு தலைவர் இராஜினமா

வவுனியா ஜூலை, 20

நெடுங்கேணி பிரசைகள் குழுத்தலைவர் திரு. த. முத்தையா தமது தலைவர் பதவியை இராஜிநாமாச்செய்துள்ளார்.

பிரசைகள் குழுவின் செயலாளருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்ததும் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனல் இன்று அந்த எதிர்பார்ப்பு வீண்போய் விட்டது. மக்கள் இப்போது மேலும் அதிக இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் மக்களுக்கு அவர்களது இன்னல்களைப் போக்குவதற்கு எதுவித உதவியும் செய்ய முடியாமல் இருப்பதால் தலைவர் பதவியை இராஜிஞமாச் செய்கிறேன் எனத்தெரிவித்துள்ளார். (ஒ-164)

# பொலீஸ் நிலையத்தில் அபகரிக்கப்பட்ட ஆயுதங்கள் விவரம்

கொழும்பு ஜூலை 20

மடுல்சீம பொலீஸ்நிலையத்தாக்குதலில்போலீஸ் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்துகொள்ளை போன ஆயுதங்கள் பற்றிய விவரம் வெளியிடப்பட்டு உள்ளது.

அவை வருமாறு: ஸ்டேர்லிங் சப்மெஷின் துப்பாக்கி, தானுகரவை நிரப்பும் ஒரு துப்பாக்கி பதினெட்டு 303 ரக ரைபிள்கள், றிப்பீட்டர் ஷொட்கன்கள் ஒரு தொகை, ஏராளமான ரவைகள், பொலீஸ் நிலையத்தின் தகவல் தொடர்பு சாதனம், பணம் ரூபா 900/-

இச்சம்பவம் சனி அதிகாலை இடம் பெற்றது.

பொலீஸாரைக் கதிரைகளுடன் கட்டி வைத்து விட்டு இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது என்று அறிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மூன்று பொலீஸார் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (இ எ)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி ஜெஸ்லின் யேசுதாசன்**

அன்னையின் மடியில்
23-10-1979
ஆண்டவன்
திருக்கரத்தில்
20-07-1985

"சிறுவர்களை நம்மிடம் வரவிடுங்கள். மோட்ச இராட்சியம் அவர்களுடையது" என்று திருவாய் மலர்ந்த யேசுவே! அழைத்தனையோ எம் குடும்பத் தலைக் கொழுந்தை! அழுது மனம் ஆறவில்லை. குஞ்சு! ஆண்டவர் வலக்கரத்தில் சமாதானத்துடன் வீற்றிருப்பாய் என்று ஆற்றுகிறோம் மனதை.

உன் பிரிவால் பரிதவித்து துடித்து நிற்கும் அன்பு அப்பா, மம்மி, தம்பி, தங்கை, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, அன்ராமார், அங்கிள்மார், சுற்றத்தார் அனைவரும்.

தகவல்:
யசிந்தா ஆசிர்வாதம்
மாமூலை
(5325)

யாழ்ப்பாணம்

# தாதியர் பயிற்சி பாடசாலைக்கு இந்தியாவிலிருந்து விரிவுரையாளர்?

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிப் பாடசாலைக்கு இந்தியாவில் இருந்து விரிவுரையாளர்களைக் கொண்டுவர சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ்ப்பாணப் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில், விரிவுரையாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனுல் தாதிகள் பயிற்சிப் பாடசாலை மூடப்படும் அபாயநிலை தோன்றியுள்ளதாக யாழ் சுகாதார அதிகாரிகள் அண்மையில் உதயனுக்கு தெரிவித்திருந்தார்.

அது தொடர்பான செய்தியும் உதயனில் வெளியாகி இருந்தது.

ஆறு விரிவுரையாளர்கள் பயிற்சி வழங்கிய இக்கல்லூரியில் இரண்டு பேர் மட்டுமே அண்மைக்காலமாக பணியாற்றி வந்தனர்.

அண்மைக்கால அசம்பாவிதங்கள் காரணமாக ஒரு விரிவுரையாளர் மரணமானயடுத்து அவரது வெற்றிடம் நிரப்பப்படவில்லை.

இந்த நிலையில் தாதிகள் பயிற்சிப் பாடசாலை [illegible] நடத்த [illegible] நிலை ஏற்பட்டது.

எனினும் யாழ் சுகாதாரத்திணைக்களம் சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டதை அடுத்து இந்திய விரிவுரையாளர்களைக் கொண்டு வரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இரண்டு அரசுகளும் பேச்சுவார்த்தைநடத்தி கூடிய விரைவில் இந்திய விரிவுரையாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கலாம் என நம்பப்படுவதாக சுகாதாரத் திணைக்கள [illegible] நம்பிக்கை தெரிவித்தன. (ஒ-10)

## பூனை ஏற்படுத்திய மரணம்

யாழ்ப்பாணம் ஜூலை20

குருநகர் வாசி ஒருவர் தீக்காயங்களுக்குள்ளாகி மரணமானர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் செ. பெர்னண்டோ (35 வயது) என்பவர் ஆவார்.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

பிரஸ்தாப நபர் கடந்த 16 ஆம் திகதி தொழிலுக்குச் சென்றுவிட்டு வந்து படுக்கைக்குச் சென்ருர்.

அப்போது மேசையில் இருந்த மண்ணெண்ணை விளக்கை பூனை தட்டியதால் விளக்கு வீழ்ந்து தீப்பற்றிக் கொண்டது.

அதனை அடுத்து இவர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப்பின்னர் நேற்று மரணமானர். (ஒ-9)


THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

**O/L88**

DAY CLASS

காலை 8-00

பி-ப 1-00

4 மாத தீவிர பயிற்சி வகுப்பு

பிரிவு I ஆரம்பமாகியுள்ளது.

வருடம் தோறும் சிறந்த பெறுபேறுகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவுடன் மேலும் சில விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

(C-5896)

உயிரியல் பிரிவுக்கென தனித்துவம் பெற்ற இரு ஆசிரியர்களும் யாழ் நகரில் ஒருமித்த சேவையாற்றும் ஒரே ஒரு நிறுவனம்:

**A/L 90**

விலங்கியல்: திரு. தம்பிராஜா
(சனி, ஞாயிறு, 2-00 p. m.)

தாவரவியல்: திரு. பாலா
(சனி, ஞாயிறு, 1-00 p. m.)

(C-5895)



**MEDI MICRO LAB**

மருத்துவ ஆய்வு கூட சேவை

Medical Labouratry Service

ஈ. சி. ஜி இரத்தப் பரிசோதனைகள் மற்றும்:
இதர ஆய்வு கூட சேவைகள் எம்மால் குறைந்த கட்டணத்துடன் சிறந்த முறையில் வழங்கப்படுகிறது.

வில்லியம் காவே ஞாபகார்த்த மருத்துவமனை

William Harway Memorial Hospital

17, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (5100)


## 31-ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**திரு. செல்லத்துரை இராமதாஸ்**

மலர்வு 12-06-1923 உதிர்வு 20-06-1988

பாசம், வாய்மை, பொறுமை, மென்மை ஆகியவற்றின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை நேர்வழி நடத்திய எமது அன்புப் பிதாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
உங்கள் நினைவில் உயிர் வாழும்
பிள்ளைகள், மருமகள்.

68, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (5322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

**பொருள்:**

சொற்களின் நடையை ஆராய்ந்த நன்மை உடையவர், அவையின் செவ்வியை ஆராய்ந்து நன்ருக உணர்ந்து சொல்ல வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22703
20-07-1988 த. பெ. இல. 23


## வளைகுடாவில் அமைதி

எட்டு வருட கால வளைகுடா யுத்தத்துக்கு முடிவு ஏற்படும் நல்ல அறிகுறி ள் தோன்றியுள்ளன.

ஒருவருடத்திற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விடுத்த - இயற்றிய- யுத்தநிறுத்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக ஈரான் திங்கட்கிழமை அறிவித்தது. அத்தோடு அது சம்பந்தமான அறிக்கையை ஐ. நா, பொதுச் செயலாளரிடமும் அது கையளித்தது.

ஈரானின் இந்தத் திடீர் முடிவு உலக நாடுகளில் பெரும் ஆச்சரியத்தையும், பரபரப்பையும் உண்டாக்கியது. கடைசி வரை போர் என்றும், மக்கள் அழிந்தாலும், நாடு அழிந்தாலும் போர் என்றும் அடம்பிடித்து வந்த ஈரான், திடீர் என யுத்த நிறுத்தத்துக்கு இணங்கியதாகச்செய்தி வெளிவந்ததும், அதனை நம்பலாமா, உண்மைதாஞ என்று பலரும் ஆச்சரியப்பட நேர்ந்தது. சந்தேகம் எழுப்பும் நிலையும் இருந்தது.

எனினும் யுத்த நிறுத்தத்துக்கு இணக்கம் தெரிவிக்கும் ஈரானின் அறிக்கை ஐ. நா. செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்த பின்னரே யுத்த நிறுத்த இணக்கம் ஊர்ஜிதமானது,

ஈரானின் யுத்தநிறுதத முடிவை உலக நாடுகள் பலவும் வரவேற்றுள்ளன; பாராட்டி உள்ளன. ஆனால் அமெரிக்காவும் அதனைச் சார்ந்த சில நாடுகளும் ஈரானின் அறிவிப்பைச் சந்தேகக் கண்ணுடன் நோக்கி உள்ளன.

யுத்தத்தில் ஈடுபட்ட அடுத்த நாடான ஈராக், ஈரானின் முடிவு முக்கியமானது எனத் தெரிவித்த போதிலும் மிக அந்தரமான நிலையில், அவசரமாகவே எடுக்கப்பட்டிருப்பதாக வர்ணித்தது.

எப்படியோ, ஈரான் ஒரு வருடத்தின் பின்னராவது யுத்தநிறுத்தக் கோரிக்கையை ஏற்று, இணங்கியிருப்பது பெரிய திருப்பம்; வரவேற்கக் கூடியது என்றே அமைதியை விரும்பும் நாடுகள் கருதுகின்றன.

எல்லையில்லா யுத்தம் முடிவுக்கு வருவது வரவேற்சத் தக்கது. உலக அமைதிக்குப் பெருமளவில் பங்களிக்க வல்லது. வேண்டாத அனர்த்தங்களுக்கும், அழிவுகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்து நிம்மதியைத் தரவல்லது. சண்டையை விட சமாதானம் எல்லா வகைகளாலும் சிறந்தது; நன்மையானது.

யுத்தம் ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையில் நடந்த போதிலும், வளைகுடாப் பகுதி மட்டும் பாதிக்கப்படவில்லை. சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. வல்லரசுகளும் பக்கம் சாயும் ஆபத்து உண்டானது.

எனவே வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஏற்படுவதால் சர்வதேச ரீதியிலும் பல நன்மைகளைக் கொண்டுவரும் என்பதில் ஐயம் இருக்க முடியாது.

அந்த நன்மைகளை அடைவதற்கு, உண்மையான போர் ஓய்வு தேவை. வெறும் யுத்த நிறுத்த அறிவிப்போடு நின்றுவிடாமல், சர்வதேச விதி முறைப்படி போர் நிறுத்தம் அமுலுக்கு வரவேண்டும்.

தாக்குதல்கள் இரு தரப்பிலும் நிறுத்தப்பட வேண்டும். படைகள் அந்தந்த நாட்டு எல்லைகளுக்கு வாபஸாக வேண்டும். கைதிகள் பரிமாறப்பட வேண்டும். இந்தக் காரியங்கள் சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றின் மேற்பார்வையில் நடந்தாக வேண்டும்.

ஐ. நா. மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளுக்கு அசையாத ஈரான், தானுக யுத்த நிறுத்தம் செய்ய முன்வந்ததை அதன் பலவீனம் என்று கருதாமல், சந்தேகிக்காமல் இருக்கும் பண்பை ஈராக்கிடம் இருந்து, அமைதி விரும்பும் நாடுகள் எதிர்பார்க்கின்றன.

ஒரு வருடத்திற்கு முன்னரே யுத்தநிறுத்தத்துக்குப் பெருந்தன்மையுடன் இணங்கிய ஈராக், இப்போதும் அமைதியையும், சமாதானத்தையும் நாடிச் செயற்பட வேண்டும். குழப்பம் விளைவிப்பதை உள்நோக்கமாகக் கொண்டவர்களின் தூண்டுதல்களுக்கு இரையாகிவிடக்கூடாது.

அனர்த்தங்கள், அழிவுகள் நீங்கி சமாதானமும் அமைதியும் உண்மையாகவே தோன்றுவதற்கு உடனடிப் பணிகளைச் செய்து ஊக்குவிக்கும் பொறுப்பு ஐ. நா. வுக்கு உண்டு. வளைகுடாவில் அமைதி உருவாகக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை, நல்ல தருணத்தை, இழந்து விடாமல், நழுவவிடாமல், தீய சக்திகளின் செல்வாக்குக்கு இடங்கொடாமல் நேரிய சிந்தையுடன் செயற்பட வேண்டிய கடைப்பாடும் ஐ. நா. வுக்கே உண்டு. அதன் செயலாளர் பெரஸ்டி குயிலரின் ஆற்றலுக்கும், ஆளுமைக்கும் இந்தப் பொறுப்புகளும் கடமைகளும் பெரும் சவாலாக அமையும் எனலாம்.

# வளைகுடாவில் பத்து நாளில் யுத்த நிறுத்தம்!

## ஐ.நா. பொதுச் செயலாளர் நம்பிக்கை!!

நியூயார்க், ஜூலை 19

இன்னும்பத்துத்தினங்களுக்குள் வளைகுடா போரில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும் என்று ஐ. நா. பொதுச்செயலாளர் பெரெஸ்டி குயிலர் நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஈரான் நிபந்தனையற்ற விதத்தில் யுத்த நிறுத்தம் செய்ய ஒப்புக் கொண்ட பின்னர் பொதுச் செயலாலார் பெரெஸ்டி குயிலர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

ஈரானின் அறிவித்தல் வளைகுடாவில் அமைதியைக் கொண்டு வரும் வாய்ப்பையை ஏற்படுத்தி உள்ளது.

ஈரான், ஈராக் ராஜதந்திரிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கஉள்ளேன்.

அடுத்த பத்துதினங்களுக்குள் யுத்த நிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இப்படி பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் ஒன்று வந்தால் அதை மேற்பார்வை செய்ய தயார் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்து உள்ளது.

யுத்த நிறுத்தம் ஒன்று வந்தவுடன் இருதரப்பினரும் தங்களிடம் உள்ள யுத்தக்கைதிகளைப்பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்று ஐ. நா. பொதுச் செயலாளர் அறிவித்து உள்ளார் (எ)

## மோதல் முடியவில்லை என்கிறது ஈரான்!

தெஹ்ரான், ஜூலை 19

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்துக்கு ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமெனியின் சம்மதம் கிடைத்தது என்று அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் வளைகுடா யுத்தத்தை இடைநிறுத்தி வைத்திருக்கிறோமே ஒழிய, மோதல் முற்ருகத் தீரவில்லை என்று ஈரான் பதில் ஆயுதபடைத் தளபதி ரஸன் சஜானி அறிவித்தார்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர், யார் வளைகுடா போரை ஆரம்பித்தது என்ற விசாரணையை நடத்தப் போவதாக ஐ. நா. பொதுச் செயலர் உறுதியளித்திருப்பதாகவும் அவர் சொன்னர்.

## ஆர்மேனியாவின் கோரிக்கையை சோவியத் உயர்பீடம் நிராகரிப்பு!

மாஸ்கோ, ஜூலை 19

கரபா பகுதியை ஆர்மேனியா மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை சோவியத் சுப்ரீம் கவுன்ஸில் நிராகரித்து விட்டது. கூட்டத்துக்கு சோவியத் ஜனுதிபதி அன்றி குரொமிக்கோவ் தலைமை வகித்தார்.

தகராறுக்குத் தீர்வு, சோவியத் யூனியனின் இன ஒற்றுமையை பாதிக்காத விதத்தில் காணப்பட வேண்டும் என்று கூட்டத்தில் திரு குரொமிக்கோவ் வலியுறுத்தினுர்.

சோவியத் சுப்ரீம் கவுன்ஸிலின் விசேட குழு ஒன்றை ஆர்மெனியா மாநிலத்துக்கு அனுப்புவது என்றும் சோவியத் அரசு தீர்மானித்தது. (எ)

### ராஜீவின் நம்பிக்கை

ஸ்பெயினில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி இலங்கைப் பிரச்சினை பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்தார்.

பிரதமர் காந்தி சொன்னதாவது:

போராளிகள் மீண்டும் சொன்ன சொல்லில் இருந்து பின்னுக்குப் போய் விட்டார்கள்.

அறிவுபூர்வமாக நிலைமையை உணர்ந்து வன்செயலை விட்டு அமைதி வழிக்கு அவர்கள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு உண்டு.



## மண்டேலாவை விடுவிக்க தென் ஆபிரிக்கா மறுப்பு!

கறுப்பு இனத் தலைவர் நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்று உலகநாடுகள் விடுத்த கோரிக்கையை தென் ஆபிரிக்க அரசு நிராகரித்து விட்டது.

உள்துறை அமைச்சர் இத் தகவலை நேற்று வெளியிட்டார்.

நெல்சன் மண்டேலாவின் 70 ஆவது பிறந்த நாள் நேற்று உலக நாடுகளில் கொண்டாடப்பட்டது.

அதையொட்டி அவரை விடுவிக்கும்படி உலக நாடுகளின் தலைவர்கள், தென் ஆபிரிக்காவுக்கு ஒரு மனதாக வேண்டுகோள் விடுத்தனர்.

''மண்டேலாவை விடுவிக்கக் காலம் இன்னும் வரவில்லை'' இப்படித் தென் ஆபிரிக்க உள்துறை அமைச்சர், உலக நாடுகளின் கோரிக்கை குறித்து கருத்து வெளியிட்டார். (எ)

## திபெத்தில் பகிரங்க விசாரணை!

லாஸா, ஜூலை.19

திபெத்தில் அண்மையில் கலவரம் செய்தவர்கள் என்று கருதப்படும் இருபத்தைந்து பேர் சீன அரசினுல் பகிரங்க விசாரணைக்குட்படுத்தப்பட்டார்களென்று அறிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் பில்ஹேயடன் லாஸாவுக்கு விஜயம் செய்வதற்கு முதல் நாள் இப்பகிரங்க விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

திபெத்தில் எதிர்காலத்தில் அமைதியின்மை இடம்பெறாமல் உறுதி செய்யும் நடவடிக்கையாகவே, இப்பகிரங்க விசாரணை சீன நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. (எ)

## பாகிஸ்தான் அணுகுண்டு

மாட்ரிட், ஜூலை 19

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஸ்பெயின் நாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு தருக்கி பயணமானுர்.

அதற்கு முன்னுள் திரு. காந்தி செய்தியாளர் மாநாட்டிலும் இந்திய சமூகத்தவர் அளித்த வரவேற்பிலும் கலந்து கொண்டார்.

அப்போது திரு. காந்தி சொன்னதாவது;

பாகிஸ்தானிடம் அணுகுண்டு செய்யும் சக்தி இருக்கின்றது.

அணுக்குண்டு தயாரிக்கும் முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டு வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அம் முயற்சியை பாகிஸ்தான் கைவிட வேண்டும்.

சீனவுடனை உறவை வளர்த்துக் கொள்ளவே இந்தியா விரும்புகிறது.

இப்படி பிரதமர் காந்தி தெரிவித்தார். (எ)

## வளைகுடா யுத்தநிறுத்தம் இஸ்ரவேலுக்கு எதிரான பயமுறுத்தலாம்!

ஜெருசலம், ஜூலை19

வளைகுடா யுத்த நிறுத்தம் இஸ்ரவேலுக்கு எதிரான புதிய பயமுறுத்தல் என்று வர்ணிக்கப்பட்டது.

இஸ்ரவேல் அரசு அதிகாரி நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

சகல அரபு நாடுகளும் இஸ்ரவேலுக்கு எதிராகப் படைபலத்தைத் திரட்டும் முயற்சியில் ஈடுபடும் சந்தர்ப்பமொன்றை இந்த யுத்த நிறுத்தம் வழங்கியிருப்பதாக அந்த அரசுப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

# முல்லைத்தீவு மக்களின் அன்றுட வாழ்க்கை சீரழிகிறது

## அங்குள்ள நிலைமை பற்றி விடுதலைப் புலிகள்

முல்லைத்தீவின் தற்போதைய நிலைமை மிகவும் அபாயகரமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இப்பகுதிக் காடுகளில் தமிழ்ப் போராளிகள் மறைந்திருக்கின்றுர்கள் என்ற காரணம் காட்டி பல்லாயிரக்கணக்கான இந்தியத் துருப்பினர் காட்டுப் பகுதிகளில் குவிக்கப்பட்டு பாரிய தேடுதல் வேட்டை பல நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்பிரிவு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டுப் பகுதியில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் தமது தேடும் நடவடிக்கையை தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

அவ்வூர் மக்கள் விவசாயச் செய்கையையும் கைவிட்ட நிலையில் இடம் பெயர்ந்துள்ளனர்.

### பயிர்கள் அழிப்பு

விஸ்வமடு, உடையார் கட்டு, புதுக்குடியிருப்பு, ஆகிய பகுதிகளில் வாழைத் தோட்டங்கள், மிளகாய்த் தோட்டங்கள் மற்றும் தோட்டப் பயிர்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன.

இதேபோன்று குமிழமுனை, தண்ணிமுறிப்பு, முறிப்பு ஆகிய பகுதிகளிலும் நெற்செய்கை அழிக்கப்பட்டு இப்பகுதிகளில் இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டுள்ளது.

இந்தப் பகுதியை அண்மித்த காடுகள் மீதும், கிராமங்கள் மீதும் தொடர்ச்சியான 'ஷெல்' தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும், நவீன ஹெலிக்கொப்டர்களின் பாரிய குண்டுவீச்சுத் தாக்குதல்களும் இடம்பெறுகின்றன.

இதனுல் காட்டு விலங்குகள் உட்பட கால் நடைகள் அனைத்தும் அழிந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கின்றது.

இதேநேரம் நாயாற்றுப் பகுதியில் இறால், மீன்பிடி நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன. இச்செயல்கள் மூலம் பெரும்பாலான மக்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளனர்.

தண்ணிமுறிப்பு பகுதி மக்கள் அவ்விடத்தை விட்டு வெளியே செல்லக்கூட இன்றுவரை அனுமதிக்கப்படவில்லை. கடந்த 3 ஆம் திகதி அப்பகுதியில் நடைபெற்ற மோதல் ஒன்றில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதன் பின்பு இராணுவத்தினர் அப்பகுதி மக்களை அடித்துச் சித்திரவதை செய்தனர்.

முல்லைத்தீவின் அநேக பகுதிகளில் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு மக்கள் இடம்பெயர முடியாதநிலை, இராணுவச் சோதனை நிலையங்களில் தினமும் தொடரும் கெடுபிடிகள் இப்படியான நிகழ்வுகளே எமது மக்களின் அன்றுட வேதனைகள்.

இங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களை மனித நேயமுள்ள உலக நாடுகள், மனித உரிமைச் சங்கங்கள், சர்வதேச மன்னிப்புச் சபையினர் ஆகியோர் நேரிடையாக வந்து பார்வையிட்டு போலியான அறிக்கைகளையும், செய்திகளையும் நிராகரித்து தமிழ்ப் பிரதேசங்களில் நாளும் நிகழும் உண்மை நிலையினை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

### விடுதலைப் புலிகள்— இந்திய அரசு பேச்சுத் தோல்வி

## பொதுத்தேர்தலை ஒத்திவைக்க சந்தர்ப்பம் அளித்துள்ளது

### சிறிமாவோ கூறுகிருர்

கொழும்பு ஜூலை 20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இந்தியா நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தது பொதுத்தேர்தலை ஒத்திவைக்கும் சந்தர்ப்பத்தை அளித்துள்ளது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னுர்.

ஒப்பந்தத்தின் படி திரு ஜெயவர்த்தனு தமது பொறுப்பைநிறைவேற்றிவிட்டார். இந்திய அரசு தனது கடமையைச் செய்யவில்லை என்றும் திருமதி பண்டாரநாயக்கா கூறினுர்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பு ஆங்கில வார இதழுக்களித்த பேட்டியில் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;-

பிரபாகரனுடன்பேச்சு நடத்துவதில பிரயோசனமே இல்லை. காலம் கடத்துவதில்தான் அவர் ஈடுபட்டிருக்கிருர். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை பிரபாகரன் ஒரு நாளும் ஏற்கமாட்டார்.

இராணுவரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வழிக்குக் கொண்டு வருவது இந்தியாவின் கடமை.

அதற்குப் பதில் இந்தியா விடுதலைப் புலிகளை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே விமானத்தில் ஏற்றி இறக்குகின்றது. ஏன் இந்தியப்படைகளினுல் பிரபாகரனைக் கைது செய்ய முடியவில்லை?

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் சென்னையில் தங்கியிருப்பதற்கு இந்தியா அனுமதிக்கக் கூடாது.

ஜெயவர்த்தனு அரசு சுதந்திரக் கட்சியைத் தடை செய்யும் அளவுக்கு போகாது. அப்படிச்செய்தால் சர்வதேச அரங்கில் அரசுக்கு கெட்ட பெயர் வந்து விடும்.

ஆனுல் என் கட்சியின் ஆதரவாளர் மேல் அரசு நடவடிக்கை எடுக்கக் கூடும்.

இப்படி அவர்கூறினுர். (இ-எ)

## பௌத்தபிக்கு உடையில் பல்கலைக்கழக மாணவர்

கொழும்பு, ஜூலை 21

பௌத்தபிக்கு உடையில் சென்றதாகக் கூறப்படும் இரண்டு பல்கலைக்கழக மாணவரை வத்தேகம பொலீஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து துப்பாக்கி ரவைகள், அரசு எதிர்ப்புப் பிரசுரங்கள் முதலியனவற்றைப் பொலீஸார் கைப்பற்றினர்.

அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதல் வருட மாணவர் என்று தெரிகிறது. (எ)

## சமய சந்நிதிகளில்

### லிகோரியார் தேவாலய உற்சவம்

சச்சாய்வீதி புனித லிகோரியார் தேவாலய வருடாந்த உற்சவங்கள் இம்மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

31 ஆம் திகதி நற்கருணை ஆராதனையும் முதலாம் திகதி திருநாட் பாடற்பலிப் பூசையும் திருச்சொருப பவனியும் இடம்பெறும்.

அருட்திரு ஜே ஏ கருணுரன் அடிகளார் விழாக்களை நடத்தி வைப்பார். (இ-31)

### தேசிய தொழில் பரீட்சைக்கான விவரங்கள்

யாழ்ப்பாணம் ஜூலை 21

உலக வங்கியின் அனுசரணையுடன் தேசிய தொழில் பரீட்சை சபை நடத்தும், தேசிய தொழில் பரீட்சைகள் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளன.

இதற்கான முழுவிவரங்களையும் கோக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி தொழில் பரீட்சை அதிகாரி திரு. ம. சிவயோகசுந்தரத்திடம் பெற்றுக் கொள்ளலாம். (இ-சி)

### ஆக்கவழி...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

ளார். எந்த ஒரு காரியத்தையும் எத்தனை பேர்சாதிக்கின்றுர் என்பதிலும் பார்க்க எத்தகைய உள்ளம் வாய்ந்தவர்கள் சாதிக்கின்றுர்கள் என்பதே சிந்தனைக்குரியது.

எனவே, அமரர் தங்கராசா எமக்குக் காட்டிய வழி, எமக்கு ஓர் ஆதாரபூர்வமான ஆக்கவழி. இவ்வழியில் நின்று நாம் பார்ப்போமானுல், கல்வி கற்பதன் நோக்கம் ஒழுக்கத்துடன் கூடிய உயரிய மனித இயல்பை வளர்த்து மனிதாபிமான பணிகளில் ஈடுபட வைப்பதற்கே என்பதும், கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்த அத்திவாரத்திலே தான் எழுச்சிமிக்க சமூகம் அமைக்கப்படவேண்டுமென்பதும், பொறுப்புணர்ச்சியும் கடமையுணர்ச்சியும் இருக்குமானுல் தொடங்கப்படும் அத்தனை பணிகளுக்கும் வெற்றியுண்டு என்பதும் தெளிவாக விளங்க் கிடக்கிறது.

''தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம் தெல்லுக மக்களெல்லாம் ஒன்றே எனனும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் அங்கே சண்டையில்லை தன்னலந்தான் தவிர்ந்ததாலே''

என்று பாடிய பாரதிதாசனின் பாடலை அமரர் வாழ்வோடு இணைத்து நோக்கி நிற்பதோடு எனது நினைவுரையை நிறைவாக்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

20 - 07 - 1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள

**VACANCY**

**FACTORY FOREMAN**

**ARE YOU A SKILLED PERSON?**
**ARE YOU A MANAGER?**

If yes, the opportunity that has risen in a well established Engineering Industry which is involved in production of one item with the scope to expand further may be yours.

We require a skilled person with previous experience in Foundry, Machine Shop and ability to manage people and also who is able to exibit his skill, motivate others and function independently.

SALARY NEGOTIABLE.

TECHNICAL QUALIFICATION IS AN ADVANTAGE BUT NOT NECESSARY.

**Call in person with all relevant certificates and references on SUNDAY the 24th of JULY between 9.30 a.m. and 3.00 p.m. at**

No. 28, 3rd Cross Street,
JAFFNA.

Contact:
**MR. A. J. A. SELVANAYAGAM**

(C 5819)

## நினைவூட்டல்

கீரிமலை 788 யாழ்ப்பாணம் தனியார் மினி பஸ் சங்கத்தின் 19- 04- 87 நிர்வாக சபைக் கூட்டத்தின் 14 ஆவது தீர்மானத்தின்படி 29- 10- 86ல் முன்னைய நிர்வாக சபையின் தீர்மானத்துக்கு அமைய 788 றூட்டில் எந்த இடத்தில் இருப்பவராயினும் புதுப்பதிவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

– நிர்வாகம்

(5342)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி அழைப்பு



### திரு. தம்பு நல்லையா

(இளைப்பாறிய விகிதர் சுகாதாரத் திணைக்களம்)

மலர்வு: 21- 3- 1911 மறைவு: 21- 6- 1988

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரிகள், மைத்துனர்.

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.

(5346)

## நாவலர் கோஷ்டி ஜானகி அணியில் சேரும்?

சென்னை, ஜூலை 19

அ.தி.மு.கவின் ஜானகி அணியில் நாவலர்கோஷ்டியைச் சேர்த்து ஒரு அ.தி.மு.க. ஆக மாற்றும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரைமறைவில் இது சம்பந்தமான முயற்சிகள் தீவிரமாக இடம் பெற்று வருகின்றனவாம்.

ஜானகி அம்மாள் அமெரிக்கா செல்லும் முன்னர் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசைச் சந்திக்கத் தூது அனுப்பினார்.

''அரசியல்வாதியாக இல்லாவிட்டாலும் என் பிள்ளையாக வந்து சந்திக்கலாமே' என்று அழைப்பில் ஜானகி தெரிவித்திருந்தார்.

ஜானகி அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பொன்னையனும் 'நாமெல்லாம் ஒன்றுகி விடலாம்! தேர்தல் சின்னம் நமக்கே கிடைக்கும்'' என்று ஜெ அணிப் பிரமுகர் சேலம் கண்ணனுக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(-எ)

## ஜெயலலிதாவைச் சந்திக்க ராஜீவ் காந்தி மறுப்பு

புதுடில்லி, ஜூலை 19

ஜெயலலிதாவைச் சந்திக்கப் பிரதமர் ராஜீவ் காந்தி மறுத்துவிட்டார் என்று புதுடில்லித் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

தனது இமேஜைக் காப்பாற்ற கடந்த வாரம் பிரதமர் காந்தியைச் சந்திக்க ஜெயலலிதா முயற்சித்தார்.

பிரதமரின் உதவியாளருடன் தொலைபேசியில் ஜெயலலிதா தொடர்பு கொண்டு சந்திக்க நேரம் ஒதுக்கித் தரும்படி கேட்டுக் கொண்டார்.

''நான் ஒரு எம்.பி. உடனே சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' இப்படி கேட்டார் ஜெயலலிதா.

''நீங்கள் சந்திக்க விரும்புவது பிரதமரை. உங்களுக்கு முன்னால் மற்ற நாட்டுத் தூதர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், கவர்னர்கள் என்ற பெரிய வரிசை காத்து இருக்கிறது. அதற்குப் பிறகு தான் எம்.பி.க்கு நேரம் தர முடியும். சம்பிரதாயங்களை மீற முடியாது'' என்று பிரதமரின் அலுவலகத்தில் இருந்து ஜெயலலிதாவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் இவரின் முயற்சியைப் புறக்கணித்து விட்டார் என்றே புதுடில்லி அரசு வட்டாரம் தெரிவித்தது.

பிரதமர் சந்திப்பு ஒரு நாளும் நிகழப் போவது இல்லை என்றே கூறப்படுகிறது.

(எ)

## தனியே பிரிந்து....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ம்பிக்கிறேன். புதுச் 'சின்னம், புதுக்கொடி வைத்துக் கொள்கிறேன். மக்கள் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் கொண்டு ஆட்சியைப் பிடிப்பேன்''—

இப்படி ஒருகட்டத்தில் சமரசம்பேசவந்தவர்களிடம் ஜெயலலிதா அடித்துச் சொல்லிவிட்டார்.

முன்னாள் அமைச்சர்கள் அரங்கநாயகமும் சாத்தூர் இராமச்சந்திரனும் கடைசிவரை சமரசத்துக்கு முயன்றார்கள்.

'திருநாவுக்கரசை அழைத்துப் பேசவேண்டும்' என்று சாத்தூர் இராமச்சந்திரன் சொல்ல 'என்னை மிரட்டப்பார்க்கிறீர்களா? உங்களை நம்பி நான் அரசியலுக்கு வரவில்லை' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் ஜெயலலிதா.

இந்த இருவரும் ஜெயலலிதாவை அடியோடு எதிர்க்கிறார்கள்.

கோவைத்தம்பி 'ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் 'நாவலர், பண்ருட்டி, திருநாவுக்கரசு மூவரும் கட்சிக்கு மூன்றுதூண்கள்'' என்று வர்ணித்து இருந்தார்.

அறிக்கை குறித்து கோவைத்தம்பியிடம் நேரடியாக 'என்னை வைத்துத் திரைப்படம் எடுக்க வந்தவர் தானே நீங்கள்! போவது தானே நீங்களும் நாவலர்வீட்டுக்கு'' — என்று ஜெயலலிதா கூறிவிட்டார்.

ஒரு போதும் நடராசன் — சசிகலா உறவை முறித்துக்கொள்ள மாட்டேன். அவர்கள் என் குடும்பநண்பர்கள் என்று ஜெயலலிதா முடிவாக அறிவித்து விட்டார்.

இதன் காரணமாக மாவட்டச் செயலாளர்களின் பெரும்பான்மையோர் கூடி ஜெயலலிதாவுக்குக் கொடுத்த ஆதரவைத் திரும்பப் பெறும் தீர்மானத்தை நிறைவேற்ற இருக்கின்றார்கள். ஜெயலலிதாவை நீக்கி விட்டு நாவலரை பொதுச் செயலாளர் ஆக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது என்றுசென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(எ)

## மருந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு முறையே யாழ்ப்பாணத்துக்கான மருந்து வகைகளை சுகாதார அமைச்சு அனுப்பி வைப்பது வழக்கம் இம்முறை மருந்து வகைகள் வந்து கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே யாழ், சுகாதாரத் திணைக்களம் உடனடியாக சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளது.

(ஓ–10)

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்- மாவட்ட தபாலக அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் பதவி உயர்வுடன் கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

கிழக்குமாகாண தபால் அத்தியட்சகராகவே இவர்பதவி உயர்வு பெற்றுள்ளார்.

(ஓ-10)

## திருமலையில்.........

(1ம் பக்கத் தொடர்ச்சி]

சாமி, திருமதி. பிலோமினலோறன்ஸ், ஆலோசகர் திரு எஸ். ஜீவராசா ஆகியோர் இந்திய அமைதிப் படையின் உயர்அதிகாரிகளைச் சந்திப்பதற்குச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்னர் கூட்டத்தினர் அங்கிருந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### ஒட்டலும், கிழித்தலும்

கூட்டத்தினர் சுவரொட்டிகளைத் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டு சென்றபோது பின்னால் சென்று கொண்டிருந்த அமைதிப் படையினர் அவற்றைக் கிழித்து வீசிக்கொண்டு சென்றனர்.

கூட்டத்தினர் திருஞான சம்பந்தர் வீதியாற் சென்று மடத்தடிச் சந்தியை அடைந்து அங்கும் சுவரொட்டிகளை ஒட்டிவிட்டு திரும்பி சிவன் கோவில் முன்பாக வந்து சேர்ந்தனர்.

அங்கும் சுவர்களில் சுவரொட்டிகளை ஒட்டிய போது அமைதிப்படையினர் தடுத்தனர். பெண்கள் கூடி நின்று அவர்களைக் கிழிக்கவிடாது தடுத்தனர்.

அவ்வேளை உயர் அதிகாரி ஒருவர் அங்குவந்து அதனைக் கிழிக்க வேண்டாமென்று தடுத்தார். அதனைத் தொடர்ந்து ஒட்டிய சுவரொட்டிகள் எதுவும் கிழிக்கப்படவில்லை.

இதேவேளை அதிகாரிகளைப் பார்க்கச்சென்ற மூவரும் அங்குவந்து சேர்ந்தனர். இதனை அடுத்து கூட்டம் கலைந்து சென்றது.

(ஓ-150)

## யாழ். பல்கலை..

[1ம்-பக்கத் தொடர்ச்சி)

தன.

கடந்த திங்கட்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும் என்றும் ஏனோதானோ என்று இயங்கும் நிர்வாக விடயங்களை விசாரிக்க விரிவுரையாளர்கள் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர். மேலும் இவர்கள் உயர் நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரை அறையில் பூட்டி வைத்தனர்,

மாணவர்களின் கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரஸ்தாப அதிகாரி விடுவிக்கப்பட்டார்.

உயரதிகாரி ஒருவர் மாணவர்களால் அறையில் பூட்டி வைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் முகமாகவே நிர்வாக உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் நேற்று [illegible] பகிஷ்கரித்ததாகச் சொல்லப்பட்டது.

(ஓ-5)

## தமிழ் நாடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டப்பேரணிகள், பொதுக் கூட்டங்களில் மாவட்ட ரீதியாகக் கலந்து கொள்ளும் தலைவர்கள் விவரம் வருமாறு;

சென்னை: கலைஞர் கருணாநிதி டி.ஆர். பாலு எம். பி.

ஈரோடு: பேராசிரியர் அன்பழகன்.

நெல்லை: நாஞ்சில் மனோகரன்.

காஞ்சிபுரம்: என். வி. என். சோமு எம். பி.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் சென்ற வருடம் ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதை ஒட்டியே, ஆட்சேபப் பேரணிகளையும், பொதுக்கூட்டங்களையும் அன்றைய தினத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டதாக தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ—எ—4)

## ஒத்திவைக்கு,....

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

ளருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அதிகரித்த மின் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு -சலுகை வழங்க மறுக்கப்பட்டு விட்டதால் மின்பாவனையாளர்கள் அனைவரும் 1988 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நிலுவையாக உள்ள மின்சாரக் கட்டணங்களைச் செலுத்த வேண்டுமென யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஆனாலும் இது விடயத்தில் வரியிறுப்பாளர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஓ-9)

## மாவிட்டபுரம்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் திரு. ஆ. சிவபால சுந்தரம் தலைமையில் ஆலயத்தில் உள்ளே சேவையாற்றினார்கள். அத்துடன் திரு. நா. போஜன் தலைமையில் சாரணர் [illegible] திரு. அநந்த [illegible] தலைமையில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையும் சேவையாற்றுகின்றன.

அமைதிப்படையினரால் தொங்கவிடப்பட்ட சமாதானத்தை வலியுறுத்தும் பதாகைகள் பெருமளவில் எங்கும் காணப்பட்டன.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகளும் விழாவில் கலந்து கொண்டார்.

ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் உற்சவ ஏற்பாடுகளைக் கவனித்தார்.

(ஓ-68)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோமசுந்தரம் பகவதியார்

சித்தன்கேணி – திருமதி சோமசுந்தரம் பகவதியார் காலமானார்.

இவர் காலம் சென்ற கனகசபாபதி சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் சரஸ்வதி பாலகிருஷ்ணன் (ஜேர்மனி), தயாவதி விமலேந்திரன், தயாநிதி, சபாநாயகி, திருமகள் (உதயன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலகிருஷ்ணன், விமலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி செல்லம்மா ஆறுமுகம்பிள்ளை, காலம்சென்ற மகேஸ்வரன் (ஓவசியர்) செல்வநாயகம் தங்கம்மா சபாரத்தினம், புஸ்பநாயகி மார்க்கண்டு, கணேஷ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-7-88 புதன்கிழமை காலை 8மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: பிள்ளைகள்

சித்தன்கேணி. (C [illegible]812)

## திருமதி நேசம்மா செல்லத்துரை

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்ட திருமதிநேசம்மாசெல்லத்துரை காலமானார். இவர் இளைப்பாறிய அதிபர்திரு. வே. செல்லத்துரையின் அன்பு மனைவியும், சகுந்தலாதேவி, சரோஜினிதேவி, ஜெயசிங்கம், ''ஜெயாஸ்'' உரிமையாளர் கிளிநொச்சி, ஜெயபாலன் (கனடா), வண. ஜெயநேசன், ஜெயரூபன்(கனடா), ஜெயரஞ்சன் இலங்கை வங்கி மன்னார் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. S. J. சின்னையா, திரு. P. N. மூர்த்தி இலங்கா லேனேஸ், மேரி தங்கரத்தினம், சுசிலா (கனடா), சாந்தினி (ஆசிரியை, புனித திரேசா, கிளிநொச்சி), விஜயா (கனடா), சுமதி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவருடைய இல்லத்தில் 20-07-88 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தகவல்: **பிள்ளைகள்.**

தேவி விலா,
பண்டத்தரிப்பு. (5345)

## திரு. V. P. சிவராசா

திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு. V. P. சிவராசா 19-07-88 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், இரவீந்திரநாதன் (ஜேர்மனி), சித்திராங்கதன் (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரஞ்சினியின் அன்பு மாமனாரும், சஞ்ஜீவன் ரஜீவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-07-88 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (C5825)

## திரு. நடராசா தங்கராசா (ரிங்கர்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நடராசா தங்கராசா (ரிங்கர்) 19-7-88 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23/1, நாவலடி லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று மாலை 3 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(5113) தகவல்: மகன்

**சேவ்ரி ரவல்ஸ்**
ஸ்தாபனத்தாரின்
**விசேஷ யாழ் - கொழும்பு பஸ் சேவை**
**இன்று முதல்**
**பிற்பகல் 2 - 30 மணிக்கு**
**ஆரம்பமாகின்றது**
என்பதை அறியத் தருகின்றோம்.
**பிரயாணிகளின் பாதுகாப்புக் கருதி பின் இரவில் கொழும்பில் சாதாரண**
**தங்குமிட வசதி இலவசமாக**
ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
**- சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனத்தார்-**
(C/5820)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20 - 07 - 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது, Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road Jaffna on Wednesday 20 th July 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org